கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
48	போக்குவரத்துத் துறை	17,15,42	2	8
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	11,60,50	1	–
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	3	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	617,49,99	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	18	–	–
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	37,77,69	–	–
54	வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	11,31,63	9	–
	பெருமொத்தம்	1,251,86,52	1,217,99,26	306,39,82

7. அரசினர் தனித் தீர்மானம்

உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு காவிரி நீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட ஒன்றிய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வாழ்வாதாரமாக இருக்கும் காவிரி நதிநீர் உரிமையைக் காக்கும் கடமையை நோக்கிய நமது சிந்தனையை, எண்ணத்தை, இன்னும் சொன்னால், கட்டளையை இடக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாக இது அமைந்திருக்கிறது.

2023 அக்டோபர் 9] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் காவிரி நதிநீர் உரிமையைக் காப்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும், எப்போதும், எந்தச் சூழலிலும் உறுதியாக இருக்கும் என்ற உறுதிமொழியை இந்த மாமன்றத்திற்கு முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு காவிரி டெல்டா உழவர்களுக்காக மேட்டூர் அணையானது சீராகத் திறந்துவிடப்பட்டு வருகிறது. 2021 ஆம் ஆண்டு மேட்டூர் அணை திறப்பதற்கான குறிப்பிட்ட ஜூன் 12 ஆம் நாள் அன்று திறக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் முன்கூட்டியே மே மாதம் 24 ஆம் நாள் அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டது.

காவிரி டெல்டா பகுதியில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வாய்க்கால்கள் திட்டமிடப்பட்டு முறையாகத் தூர்வாரப்பட்டதனால், காவிரி நீர் கடைமடை வரை சென்று, பயிர்கள் செழித்தன. இதன் பயனாக, 2021–2022 ஆம் ஆண்டில் 46.2 இலட்சம் டன் அளவிலும், 2022–2023 ஆம் ஆண்டில் 45.9 இலட்சம் டன் அளவிலும் காவிரி பாசனப் பகுதியில் நெல் உற்பத்தி செய்யப்பட்டு மிகப்பெரிய சாதனையைப் படைத்தோம். உற்பத்தியும் பெருகியது; உற்பத்தி பரப்பும் விரிவடைந்தது; இந்தச் சாதனையானது இந்த ஆண்டும் தொடர்ந்தது.

இந்த ஆண்டில், ஜூன் 1, 2023 அன்றைய நிலவரப்படி, மேட்டூர் அணையிலிருந்த 69.7 டி.எம்.சி. நீரளவையும், தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பையும் கருத்தில்கொண்டு, 12-6-2023 அன்று மேட்டூர் அணையை குறுவைப் பாசனத்திற்காகத் திறந்து வைத்தேன். மேட்டூர் அணையின் நீர் இருப்பு 50 டி.எம்.சி–க்கும் மேலாக உள்ளபோது, உழவர்கள் பருவத்தே பயிர் செய்ய ஏதுவாக, மேட்டூர் அணை ஜூன் 12 ஆம் நாள் திறப்பது வழக்கமாக உள்ளது. அதனை முறைப்படி திறந்து வைத்தோம். திறந்துவிடப்பட்ட நீரும் கடைமடைப் பகுதிகள் வரை சென்றடைந்தது. நமது வேளாண் பெருமக்களும் கடந்த ஆண்டுகளைப் போலவே குறுவைப் பயிரை இந்த ஆண்டும் சிறப்பாகப் பயிரிடுவதற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டார்கள்.

இத்தகைய நிலையில் செயற்கையான ஒரு நெருக்கடியை கர்நாடக மாநில அரசு உருவாக்கி வருகிறது. கர்நாடக மாநில அரசு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 அக்டோபர் 9 நமக்கு வழங்க வேண்டிய உரிய தண்ணீரை இந்த மாதத்தில் திறந்து விடவில்லை. இது தொடர்பாக நாம் எடுத்த முயற்சிகளை இந்த மாமன்றத்தில் விரிவாகச் சொல்ல வேண்டியதை, என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜூன் மாதத்தில் பிலிகுண்டுலுவிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய 9.19 டி.எம்.சி.–க்குப் பதிலாக, 2.833 டி.எம்.சி. மட்டுமே வரப்பெற்றோம். இதனைத் தொடர்ந்து 3–7–2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தார். மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, மாதவாரியாக ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் வழங்க வேண்டிய நீரினை உடனடியாக அளித்திட கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தினார்கள். மீண்டும் 5 ஆம் தேதியும் ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து வலியுறுத்தினார் தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர்.

தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனதால், 2023–2024 பாசன ஆண்டானது ஒரு பற்றாக்குறை ஆண்டு என்ற காரணத்தைக் கூறி, இதன் பின்னரும் கர்நாடகா நமக்கு அளிக்க வேண்டிய நீரினை அளிக்கவில்லை. இதனால் குறுவைப் பயிர் பாதிக்கப்படும் என்ற சூழ்நிலையில், 19–7–2023 அன்று மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி மாதவாரியாக தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய நீரை அளிக்க கர்நாடகாவிற்கு உத்தரவிட காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை அறிவுறுத்துமாறு மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து, ஜூலை 20 ஆம் தேதி அன்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வலியுறுத்தினார்கள். இதன் பின்னரும், கர்நாடக மாநில அரசு உச்ச நீதிமன்ற உத்தரவைப் பின்பற்றவில்லை.

ஜூலை 27 ஆம் தேதி அன்று, கர்நாடகாவின் 4 அணைகளின் மொத்த கொள்ளளவு 30 ஆண்டு சராசரியில் 84 விழுக்காடாகவும், அந்த அணைகளின் நீர்வரத்து 30 ஆண்டு சராசரியில்

2023 அக்டோபர் 9] [திரு. மு.க. ஸ்டாலின்]

51 விழுக்காடாகவும் இருந்தபோதிலும், பிலிகுண்டுலுவில் 13 விழுக்காடு மட்டுமே நீர் வரப்பெற்றது. இதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டிற்கு உடனடியாக நீர் வழங்குமாறு கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத் தலைவரிடம் கோரப்பட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட இந்தத் தொடர் முயற்சிகளையடுத்து, ஜூலை 25 அன்று, கபினி அணையிலிருந்து வினாடிக்கு 11,000 கன அடி நீரினை அடுத்த 6 நாட்களுக்குத் திறக்குமாறு கர்நாடக மாநில அரசுக்கு உத்தரவிடப்பட்டது.

ஜூலை 31 அன்று நடைபெற்ற காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் 83 ஆவது கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி கர்நாடகா அளிக்க வேண்டிய நீரை வழங்க உத்தரவிடுமாறு கோரியது. இருப்பினும், பிலிகுண்டுலுவில் ஆகஸ்ட் 1 முதல் அடுத்த 7 நாட்களுக்கு வினாடிக்கு 10,000 கன அடி நீரினை மட்டுமே திறக்க கர்நாடகாவிற்கு உத்தரவு அளித்தது.

கர்நாடக அரசு நமக்கு வழங்க வேண்டிய நீரின் பற்றாக்குறையை சரிசெய்யுமாறு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்திற்கு அறிவுறுத்திட ஆகஸ்ட் 4 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். இதனையடுத்து ஆகஸ்ட் 10 அன்று நடைபெற்ற காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் கூட்டத்தில், பிலிகுண்டுலுவில் வினாடிக்கு 15,000 கன அடி என்ற அளவில் ஆகஸ்ட் 11 முதல் அடுத்த 15 நாட்களுக்கு வழங்குமாறு கர்நாடகாவிற்கு உத்தரவிடப்பட்டது. ஆகஸ்ட் 11 அன்று நடந்த கூட்டத்தில் 15 ஆயிரம் கன அடி என்பதை 10 ஆயிரம் கன அடியாக ஆணையமே குறைத்துக் கொண்டது. இதனை ஏற்காமல் தமிழ்நாடு அரசின் உறுப்பினர்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தார்கள்.

இதுதொடர்பாக உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்களோடு கலந்தாலோசித்து, கர்நாடகா உடனடியாக 24,000 கன அடி நீரை வழங்கவும், பற்றாக்குறையான 28.849 டி.எம்.சி. நீரையும் வழங்கவும் உத்தரவிடுமாறு கோரி, ஆகஸ்ட் 14 அன்று தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவினை தாக்கல் செய்தது. இவ்வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், இது தொடர்பாக ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு உத்தரவிட்டது. இதனையடுத்து, ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், வினாடிக்கு 5,000 கன அடி நீரை 15 நாட்களுக்கு வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடப்பட்டது. இந்தக் கூட்டங்களில்,

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 அக்டோபர் 9 ஏற்கெனவே நிலுவையிலுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு நாம் வலியுறுத்தியபோதிலும், எந்தவித உத்தரவையும் ஆணையம் வழங்கவில்லை.

நண்பகல் 12–00

எனவே, செப்டம்பர் 19 அன்று மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை சார்ந்த நாடாளுமன்ற கட்சித் தலைவர்களுடன் மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தார். உடனடியாக 12,500 கன அடி நீரை அடுத்த 15 நாட்களுக்கு வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு அறிவுறுத்துமாறு கோரினார்கள். ஆனால், இந்த மனுமீது ஒன்றிய அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனிடையே, செப்டம்பர் 19 அன்று கர்நாடகா அரசு உச்ச நீதிமன்றத்தில் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் தனது 22, 23 மற்றும் 24 ஆவது கூட்டங்களில் எடுத்த முடிவினை மீண்டும் மறுபரிசீலனை செய்ய உத்தரவிடுமாறு கோரி ஒரு மனு தாக்கல் செய்தது. இம்மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவிரி நீர் மேலாண்மை ஆணையம் வழங்கிய உத்தரவுகளைப் பின்பற்றுமாறும், இவ்வழக்குடன் தொடர்புடைய அனைத்து மனுக்களை முடித்து வைப்பதாகவும் ஆணையிட்டது.

காவிரி நீர் மேலாண்மை ஆணையம் செப்டம்பர் 29 அன்று நடைபெற்ற தனது 25 ஆவது கூட்டத்தில், பிலிகுண்டுலுவில் வினாடிக்கு 3,000 கன அடி நீரை வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த அளவையும்விட குறைவாகவே கர்நாடகா தற்போது பிலிகுண்டுலுவில் நீரினை அளித்து வருவதால், தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமைச் செயலர், நீர்வளத் துறை அவர்கள், தலைவர், காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அவர்களுக்கு, 6–10–2023 அன்று எழுதிய கடிதத்தில் கர்நாடகா, ஆணையத்தின் உத்தரவைப் பின்பற்றாததைச் சுட்டிக்காட்டி, ஆணையம் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு 11–10–2023 அன்று அடுத்த கூட்டத்தை நடத்தவுள்ளது. அதாவது இன்னும் இரண்டு நாட்களில் நடத்தவுள்ளது. இக்கூட்டத்தில், பற்றாக்குறை ஆண்டாகிய 2023–2024-ல், ஏற்கெனவே குழு

2023 அக்டோபர் 9] [திரு. மு.க. ஸ்டாலின்]

மற்றும் ஆணையம் நிர்ணயித்துள்ள அளவில் கர்நாடகா அளிக்க வேண்டிய நீரளவில் உள்ள குறைபாட்டை ஈடுசெய்ய, அடுத்த 10–15 நாட்களுக்கு அளிக்க வேண்டிய நீரையும் சேர்த்து வழங்க வலியுறுத்தவுள்ளோம். மேலும், சட்ட வல்லுநர்களிடம் ஆலோசித்து, தேவைப்படின் தக்க சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசு, காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டங்களிலும், காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் கூட்டங்களிலும், தொடர்ந்து வலுவாக வாதிட்டு வந்துள்ளதால், 2023–2024 பற்றாக்குறை ஆண்டாக இருக்கின்றபோதிலும், 1–6–2023 முதல் 3–10–2023 வரை பிலிகுண்டுலுவில் 46.1 டி.எம்.சி. நீர் பெறப்பட்டுள்ளது.

இந்தப் பாசன ஆண்டு பற்றாக்குறை ஆண்டாக இருந்துவரும் நிலையில், 5–10–2023 வரை, 90.25 டி.எம்.சி. நீர் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. இதன்மூலம், காவிரி டெல்டாவில் 6 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்காக, முறைபாசனம்படி (Turn system) நீர் பங்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் எஞ்சியுள்ள நாட்களுக்கு நாம் நமக்கு உரிய நீரைப் பெற்று, குறுவைப் பயிரையும், அடுத்து நடவு செய்யப்படவுள்ள சம்பா பயிரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே, நமது வேளாண் மற்றும் பொதுமக்களின் நலன் காக்க ஒன்றிய அரசை வலியுறுத்தி பின்வரும் தீர்மானத்தை இந்தப் பேரவை நிறைவேற்ற வேண்டும் எனக் கோருகின்றேன். தமிழ்நாட்டு மக்களின் உணவுத் தேவைக்கானது மட்டுமல்ல– மனித உயிர்களின் உயிர்த் தேவைக்கும் அவசியமானது காவிரி நீர்! அதனைத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெற்றுத் தருவதில் எந்தச் சூழலிலும் விட்டுக் கொடுக்காமல் வாதிட்டு பெற்றுத் தருவோம்.

ஒன்றிய அரசானது, இதில் முறையாகச் செயல்பட்டு தமிழ்நாட்டு மக்களுக்குக் காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டும். இதற்கான அனைத்துவித முயற்சிகளையும் தி.மு.க. அரசு தயங்காமல் செய்யும் என்று மாமன்ற உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கிறேன். அதே உணர்வுடன் இத்தீர்மானத்தை இப்பேரவையின் சார்பில்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 அக்டோபர் 9 நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு தீர்மானம் வரையப்பட்டு, அதன் நகல் மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, வழங்கப்பட்டுள்ள அரசினர் தனித் தீர்மானத்தின் வடிவத்தினைச் செம்மைப்படுத்தி, திருத்தப்பட்ட தீர்மானத்தினை நான் இப்பொழுது முன்மொழிகிறேன்.

தீர்மானம்

"தமிழ்நாட்டின் விவசாயத்திற்கு அடித்தளமாக விளங்கும் காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாட்டிற்கு தண்ணீரைத் திறந்து விடுமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது" (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்துள்ள மேற்காணும் திருத்தப்பட்ட தீர்மானத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக ஏற்று, நிறைவேற்றித் தருமாறு வேண்டி கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்தீர்மானத்தில் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து நம்முடைய தமிழக மக்களினுடைய ஒட்டுமொத்தக் குரலாக, சுருக்கமாக ஆதரித்து பேச வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியைப் பொறுத்தவரையில், மிக crucial ஆன நேரமிது. நான் எதிர்க்கட்சியில் இருந்தபோதும் சொல்லியிருக்கிறேன். கர்நாடகத்தில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இந்த காவிரி என்பதில் ஒன்று சேர்ந்துவிடுகிறார்கள். அந்த ஒற்றுமைதான் அங்கே பெரியளவில் உள்ளது.

2023 அக்டோபர் 9] [திரு. துரைமுருகன்]

அதை நான் எதிர்க்கட்சியில் இருந்தபோதும் பேசியிருக்கிறேன்; இப்பொழுதும் அதைத்தான் பேசுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்தைச் சொல்கிறபொழுது, இந்தத் தீர்மானத்திற்குக் குந்தகம் ஏற்படுத்துகிற வகையில் இல்லாமலும், வெளியிலே வேறுவிதமான கருத்துகளைச் சொல்லாமலும் நீங்கள் உரையாற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள். திரு. ஜெகன் மூர்த்தி பேசுகிறீர்களா? சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தனித் தீர்மானத்தை வரவேற்று, என்னுடைய கருத்தை இங்கே தெரிவிக்கிறேன்.

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்"

என்று பட்டினப்பாலை காவிரியின் பெருமைகளையும், சோழ நாட்டின் செழிப்பையும் கூறியுள்ளது. 1990 ஆம் ஆண்டில் காவிரி நடுவர் மன்றம் மத்திய அரசால் அமைக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டுமென்று ஓர் இடைக்கால ஆணையை நடுவர் மன்றம் வழங்கியது. காவிரி ஆற்றின் நீர் சிக்கலில் பிப்ரவரி 5, 2007 ஆம் நாள் காவிரி நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்கியது. அதில் தமிழகத்திற்கு 419 TMC, கர்நாடகத்திற்கு 270 TMC நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்பமை நீதிபதி திரு. என். பி. சிங் அவர்கள் தலைமையிலான நடுவர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், காவிரியின் மொத்த நீர் 740 TMC எனக் கணக்கிடப்பட்டு அது தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. காவிரி நதி நீர் பங்கீட்டு வழக்கை விசாரித்த நடுவர் நீதிமன்றம் கடந்த 2007 ஆம் ஆண்டில் இறுதி உத்தரவைப் பிறப்பித்தது. அந்த உத்தரவில், தமிழகத்திற்கு 192 TMC நீர் வழங்கவும் உத்தரவிட்டிருந்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம் ஆகிய மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தன.

[திரு. மு. ஜெகன் மூர்த்தி] [2023 அக்டோபர் 9

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த இவ்வழக்கில், 2018 பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதில் தமிழகத்திற்கு வழங்கப்பட்ட நீரின் அளவு 192 TMC-யிலிருந்து, 177.25 TMC ஆகக் குறைக்கப்பட்டது. கர்நாடகாவிற்கு 284.75 TMC நீரும், கேரளாவிற்கு 30 TMC நீரும், புதுச்சேரிக்கு 7 TMC நீரும் வழங்க வேண்டுமென்றும், இந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த மத்திய அரசு 6 வாரங்களுக்குள் செயல்திட்டம் உருவாக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டது.

2018 ஆம் ஆண்டு, மே மாதம் 17 ஆம் தேதியில் மத்திய அரசு 14 பக்கங்கள் கொண்ட செயல்திட்ட வரைவு அறிக்கையைத் தாக்கல் செய்தது. இதில் தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி அரசுகள் பல்வேறு திருத்தங்களை மேற்கொண்டன. அன்றைய அண்ணா தி.மு.க. அரசின் கோரிக்கையின்படி காவிரி மேலாண்மை ஆணையம் எனப் பெயர் மாற்றப்பட்டது. அந்த அமைப்பின் தலைமையகம் பெங்களூருவிலிருந்து புதுடில்லிக்கு மாற்றப்பட்டது. நீர் பங்கீடு ஆய்வுகள் மேற்கொள்வது, அணைகளைத் திறப்பது, இறுதி முடிவு எடுப்பது உள்ளிட்ட அனைத்து அதிகாரமும் ஆணையத்திற்கே இருக்க வேண்டும் என்பதையும் உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. இது தொடர்பாக, திருத்தப்பட்ட இறுதி அறிக்கையை 2018, மே 18 ஆம் நாள் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்தது. இத்தீர்ப்பைச் செயல்படுத்தும் வரைவு அறிக்கையின்படி, காவிரி மேலாண்மை வாரியமானது, வரும் பருவகாலத்திற்குள் மத்திய அரசால் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்ப்பு அடுத்து 15 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். இதுதொடர்பான அறிவிப்பை மத்திய அரசு உடனடியாக அரசிதழில் வெளியிட வேண்டுமெனவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன்படி, (மணியடிக்கப்பெற்றது) ஜூன் 1 ஆம் நாள் காவிரி மேலாண்மை வாரிய அறிவிப்பு மத்திய அரசிதழ் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. காவிரி மேலாண்மை ஆணையத்தின் தற்காலிகத் தலைவராக மத்திய நீர்வளத் துறை செயலாளர் திரு. வி.பி. சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆணையத்திற்கான உறுப்பினர்களை. . .

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சொல்கிற கருத்தெல்லாம் ஏற்புடையது. இது எல்லாமே, எல்லா பத்திரிகைகள், ஊடகங்களுக்கெல்லாம் தெரிந்த

2023 அக்டோபர் 9] *[பேரவைத் தலைவர்]*

விஷயங்கள்தான். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தனித் தீர்மானத்தை அரசியல் கலப்படமில்லாமல், எல்லோரும் இணைந்து, தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாக இதை ஆதரிக்கின்றார்கள் என்ற நிலைப்பாட்டுக்கு, உங்களுடைய கருத்தை மட்டும் வரவேற்று அமர்ந்தால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். வருகின்ற உறுப்பினர்களும் அதுபோல் பேசினால் போதுமென்று நான் நினைக்கின்றேன்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *ஆறுகள் தேசிய வளங்கள் என்றும், மாநிலங்களுக்கிடையேயான நதியின்மீது எந்த மாநிலமும் பிரத்யேக உரிமை கோர முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. தற்போது நடைபெறும் இப்போராட்டத்தில் கர்நாடக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி, தமிழகத்திற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் கருத்து, மையக் கருத்து. அதை கொஞ்சம் சுருக்கமாக, அதை ஆதரித்தீர்களென்றால் நன்றாக இருக்கும்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *நீர் திறந்துவிட முடியாது என்று அறிவித்தது. மேலும், அங்கிருக்கும் எதிர்க்கட்சிகள் பந்த் நடத்தின. அங்கேயுள்ள தமிழர்களை அச்சுறுத்தினார்கள். ஆனால், கர்நாடகாவில் ஆட்சியில் இருப்பது, தி.மு.க. கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் என்பதால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர். . . (குறுக்கீடு)*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *நம் முதல்வர், கர்நாடக முதல்வரோடு சுமுகமாகப் பேச்சுவார்த்தைமூலம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம். நீங்கள் கொஞ்சம், தயவுசெய்து, என்னைப் பாருங்கள். தனித் தீர்மானத்தை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். இதில் நீங்கள் ஒரு history-ஐ சொல்கிறீர்கள். எல்லோருக்கும் தெரிந்த விஷயங்கள்தான். தயவுசெய்து, எல்லோருக்கும் தெரிந்த விஷயத்தை நாம் தெரியப்படுத்த வேண்டியதில்லை. இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுங்கள்.*

[*2023 அக்டோபர் 9*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *ஆதரித்துத்தான் பேசுகிறேன். ஒரு நிமிடம் இருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் முதலில் வரவேற்றீர்கள். (குறுக்கீடு)*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *டெல்டா மாவட்டத்தின் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதாலும், காவிரி மேலாண்மை வாரியம், உச்ச நீதிமன்றத்தின். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தொடர்ந்து அதை* continue *செய்ய வேண்டுமா என்று பாருங்கள். நீங்கள் கடைசிப் பக்கத்தை எடுத்து நன்றி சொல்லுங்கள். விஷயம், தெரிந்த விஷயம், தயவுசெய்து.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *தமிழக மக்களின் குடிநீர் தேவையையும், குறிப்பாக டெல்டா மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் விவசாயம் மற்றும் குடிநீருக்காகப் போராடியும் தண்ணீர் கொடுக்க மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்தும்; மத்திய அரசு வேடிக்கை பார்க்காமல் ஏன் கண்டிப்பான உத்தரவு போடவில்லை என்றும், கர்நாடக அரசுமீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், மத்திய அரசின்மீதும் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும், தேவைப்பட்டால், கர்நாடக அரசையும், மத்திய அரசையும் கண்டித்து, தமிழகத்தில் பந்த் நடத்தவும் என எந்த நடவடிக்கையைத் தமிழக அரசு எடுத்தாலும் விவசாய மக்களின் நலன் கருதி, புரட்சி பாரதம் கட்சி அதற்கு ஆதரவு அளிக்கும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் கொண்டு வந்திருக்கும் தனித் தீர்மானத்தைப் புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் ஆதரித்து, வரவேற்று அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர் என்பது நாம் கர்நாடகத்திடத்திலோ, ஒன்றிய அரசிடத்திலோ அல்லது காவிரி நீர் மேலாண்மை வாரியத்திடத்திலோ, ** கேட்கிற விஷயம் அல்ல. காவிரி நீர் என்பது நம்முடைய பிறப்புரிமை. காவிரி என்கிற பெயர் தூய*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 அக்டோபர் 9] [திரு. தி. வேல்முருகன்]

தமிழில் இருப்பதைக் கொண்டே, இதில் கர்நாடகத்துக்காரர்கள் எந்த விதத்திலும் சொந்தம் கொண்டாட முடியாத ஒன்று. இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, காவிரி தமிழ்நாட்டின் உரிமையாக பல்வேறு சங்ககால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டு வந்திருக்கிறது. இந்த வரலாற்று உரிமை கொண்ட தமிழினம், இன்றைக்கு அண்டை மாநிலத்தில் குடிநீருக்காகவும், டெல்டா மாவட்டத்தினுடைய விவசாயிகளின் வாழ்வுரிமைக்காகவும், ஒவ்வொரு முறையும், சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதும், இங்கே நீர்வளத் துறை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான குழுக்கள், ஒன்றியத் தலைமை அமைச்சர்களைச் சந்திப்பதும், நீர் மேலாண்மை வாரியத்திடம் முறையிடுவதும், அதையும் தாண்டி, இந்த நாட்டினுடைய உச்சபட்ச அதிகார மையமாக இருக்கின்ற உச்ச நீதிமன்றத்தில் முறையிடுவதுமாகவே, கடந்த 70 ஆண்டுகால சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் நாம் செய்து கொண்டிருக்கிறோம். 70 ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் ஒன்றியத்தில் ஆட்சி செய்கின்ற எந்தவோர் அரசாக இருந்தாலும், தமிழ்நாட்டிற்குரிய தண்ணீர்ப் பகிர்வைத் தருவதற்கு மறுத்து, அங்கிருக்கிற கன்னட, வேதிய இனவெறிக் கும்பல்களைத் தூண்டிவிட்டு, 50 ஆண்டுகாலமாகத் தமிழ்நாட்டு தமிழர்கள், அங்கு வாழ்கின்றவர்களின், வேலை நிமித்தமாகச் சென்றவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத ஒரு சூழலை உருவாக்கி, நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகியதோடு மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகள் சூறையாடப்பட்டிருக்கின்றன. இதற்காகத் தமிழர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, உரிய இழப்பீட்டை வழங்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, அங்கு ஆண்டு கொண்டிருக்கின்ற காங்கிரஸ் அரசோ, பி.ஜே.பி. அரசோ அதற்குரிய நிவாரணங்களை வழங்குவதில்லை.

பிற்பகல் 12–15

தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும், இந்தப் பிரச்சினையில் நாம் ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதை உணர்த்துகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய ஓர் அழுத்தத்தை ஒன்றிய அரசுக்குத் தருகின்ற ஒரு முயற்சியில் மொழிந்திருக்கிற இந்தச் சிறப்பு தனித் தீர்மானத்தை, தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக நான் வரவேற்கிற அதேவேளையில், ஒன்றிய அரசு பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகின்ற நிகழ்வாக மேகதாதுவில்

[திரு. தி. வேல்முருகன்] [2023 அக்டோபர் 9

அணைக் கட்டுவதற்கு பூர்வாங்க அனுமதியை அளித்திருப்பதும், பேரவைக் குழுவில் இடம் பெற்றிருக்கின்ற தலைவர்களோடு, நீர்ப்பாசன அமைச்சரைச் சந்திக்கின்றபோது, நிச்சயமாக நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டு, அனுமதியை அளிப்பதும், இத்தனை முறை முறையிட்டும், ஒரே ஓர் ஆண்டுகூட, சம்பா, குறுவை சாகுபடியின்போதும் சரி, 20 டெல்டா மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமாக இருக்கின்ற காவிரியினுடைய உரிமை நீரை நமக்குத் தந்ததாகவும் வரலாறு இல்லை. 800 டி.எம்.சி. ஆக இருந்த குடிநீரை, பாசனநீரை இன்றைக்கு கர்நாடகா அதன் பெரும் பகுதியைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு முதலமைச்சருடைய ஆட்சிக் காலத்திலும், நாம், நமக்கான உரிமை நீரை விட்டுக்கொடுத்து வந்து, இன்றைக்கு 200 டி.எம்.சி.-க்கும் குறைவாகவே நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த 172 டி.எம்.சி. தண்ணீராவது முறையாக சம்பா, குறுவை சாகுபடி காலங்களில் கர்நாடகா அரசு நமக்கு வழங்கியிருக்கிறதா என்று பார்த்தால், கர்நாடகம் வழங்கவில்லை. அதற்கு நேர்மாறாக, கர்நாடகா தமிழ்நாட்டை ஒரு வடிகால் பிரதேசமாக, அங்கு அணைகளுக்கு ஆபத்து ஏற்படுகின்றபோதும், மழை, வெள்ளம் அதிகமாக ஏற்பட்டு, பெங்களூருக்கும், கர்நாடக விவசாயிகளுக்கும், அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுகிறபோதும் மட்டும் 24,000 கன அடி, 50,000 கன அடி, 55,000 கன அடி ஒகேனக்கலிலிருந்து நீர் ஓடி வருகிறது. இதனால் கரையோரக் கடலோர மாவட்டங்களில் தொடங்கி டெல்டா மாவட்டங்கள் வரையில், இந்தக் கிளை ஆற்று நீரால் தமிழ்நாட்டு விவசாயிகளும், தமிழ்நாட்டு குடிசைவாழ் மக்களும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.

ஆதலால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில், கடந்த சில நாட்களுக்கு முன்பாக, இதற்குத் துணை போகின்ற ஒன்றிய அரசைக் கண்டித்து, ஆளுநர் மாளிகையை நோக்கி ஒரு பேரணியை நடத்த நான் முயன்றபோது, நம்முடைய தமிழக அரசும், காவல் துறையும், எங்களை சிறிதளவுகூட Governor-னுடைய இல்லத்தின் தலைப்பக்கம்கூட போகக்கூடாது எனக் கட்டுப்படுத்தினர். ஆனால், காவிரியில் காவல் துறை, தீயணைப்புத் துறை, அங்கிருக்கிற அரசு இயந்திரங்கள் வேடிக்கைப் பார்க்க, பார்க்க, தமிழர்களின் உடைமைகளுக்கும், உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத சூழல் உருவாக்கப்படுகிறது.

2023 அக்டோபர் 9] [திரு. தி. வேல்முருகன்]

***இதையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய ஒன்றிய அரசு வேடிக்கைப் பார்த்து—ஓர் இனம் அதை உருவாக்குவதற்கான—தேர்தல் காலத்தில் பயன்படுத்திக்கொள்கிறார்கள். ஆதலால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே, இந்தத் தனித் தீர்மானத்தை வரவேற்கிற இதேநேரத்தில், நாங்கள் எதிர்வினை. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, ** மற்றும் அதேபோல் ** போன்ற வார்த்தைகளை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) அவைக் குறிப்பில் அந்த வார்த்தைகள் எல்லாம் வேண்டாம் என்று நினைக்கிறேன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 கோடி மக்களின் ** அதற்கு அனுமதி கொடுங்கள். ஒரு பேரணி நடத்துவதற்குக்கூட அனுமதி தராமல் இருப்பது என்ன நியாயம்? ஆகையால், என்னுடைய வேண்டுகோள் என்பது உச்ச நீதிமன்றமும், காவிரி நீர் மேலாண்மை வாரியமும் கூறியும், ஒரு சொட்டு தண்ணீர்கூட தர மறுப்பதற்கு, ஒன்றிய அரசு நியாயமாக இந்திய ஆட்சியை நடத்துகிறது என்று சொன்னால், இந்திய துணை இராணுவத்தை அனுப்பி, அணையைக் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு, காவிரி மேலாண்மை வாரிய அதிகாரிகளோடு, சம்பா, குறுவைக் காலங்களில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நீரைத் திறந்துவிடுவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்கிற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இந்த அவையில் கொண்டுவர வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய, இந்த அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்று, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நான் எதை நினைத்து பயந்து கொண்டு உட்கார்ந்து இருக்கிறேனோ, அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார். நம்மவர்கள் அங்கே அதிகளவில் இருக்கின்றார்கள். இங்கே நாம் பேசுவதன் விளைவு அங்கே*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 9

தெரியும், அங்கே என்னவாகும் என்பதைக் கொஞ்சம் மனதில் வைத்து பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், உங்களைவிட வேகமாகப் பேசுவதற்கு எனக்கும் தெரியும்; எல்லோருக்கும் தெரியும். ஆனால், நாம் கொதிப்பதையெல்லாம் வெளியில் கொட்ட முடியாது. நீங்கள் பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் reaction அங்கே நடக்கும். அதற்காகத்தான் நான் உங்களைப் பொறுமையாக இருக்கச் சொன்னேன். தயவுசெய்து, கொஞ்சம் பொறுமையாகப் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஏற்கெனவே மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில், இதுபோன்ற நிலை வந்தபோது, நம்மை எதிர்த்து அங்கே bandh நடந்தபோது, நிருபர்கள் கேட்டார்கள், தலைவர் கலைஞர் அவர்கள் அற்புதமாக ஒரே வார்த்தையில், 'அவர்களும் நம் பந்துக்கள்தானே' என்று சொன்னார். அதைத்தான் நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் சொல்கின்றார்கள். நம்மவர்கள் பெரும்பாலானோர் அங்கேயிருக்கின்றார்கள். அதையும் மனதில் வைத்து பேச வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. தி. வேல்முருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டுமே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

பிற்பகல் 12–20

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த தமிழகத்தினுடைய நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 அக்டோபர் 9] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

டெல்டா மாவட்டத்திற்கான பாசனத்திற்கான தண்ணீர் மட்டுமல்ல இது; கொங்கு மண்டலத்தினுடைய மொத்த நிலத்தடி நீரும் இதை நம்பியிருக்கிறது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய ஆசைப்படுகின்றேன். கர்நாடகாவில் போராட்டங்கள் நடந்தபோது, சில வேண்டத்தகாத நிகழ்வுகள் நடந்தாலும்கூட, மொத்த தமிழர்களுடைய கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டிப்போட்டிருக்கிறார் என்று சொன்னால், அது தமிழர்களின் நலன் கருதித்தான் என்பதை நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, சிறிதளவில் கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டிய அந்த அவசியமும் இருக்கிறது. எதிர்வினைகளை ஆற்றுகிறோமா, இல்லையா என்பது அல்ல, நாம் கண்டனப் பதிவைச் செய்துதான் ஆக வேண்டும். இந்த நேரத்தில், 80% தண்ணீரை கர்நாடகாவிலே வைத்துக்கொண்டு, தண்ணீரைத் திறக்காமல் இருப்பது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடத்தில் பேசும்போது மிகத் தெளிவாகப் பட்டியலிட்டுச் சொல்லியிருக்கிறார்.

கர்நாடகாவை பொறுத்தவரை, யார் அங்கே ஆட்சியில் இருந்தாலும், அவர்கள் எந்த அமைப்பையும் மதிப்பது கிடையாது; காவிரி ஆணையத்தையும் மதிப்பது கிடையாது; உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையும் மதிப்பது கிடையாது; மக்களுடைய உணர்வுகளையும் மதிப்பது கிடையாது. அரசியலுக்காகவே முடிவுகள் அங்கே எடுக்கப்படுகின்றன என்பதுதான்; அது நமக்கு எதிரான முடிவாக இருக்கிறது. கர்நாடகாவில் தண்ணீரைத் தருபவர்களே இவ்வளவு ஒற்றுமைப்படுகிறார்கள் என்று சொன்னால், தண்ணீரைப் பெறுபவர்களாகிய நாம் எவ்வளவு ஒற்றுமைப்பட வேண்டும். அதைத்தான் நாம் யோசித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு செய்கின்ற துரோகமாகவே இதை நான் பார்க்கின்றேன். தமிழகத்தின் மேதகு ஆளுநர் அவர்கள், எல்லாவற்றிற்கும் கருத்து சொல்கிறாரே! இங்கேயிருந்து கிளம்பி பெங்களூருக்குச் சென்று, கர்நாடகாவின் மேதகு ஆளுநரைப் பார்த்து, எங்கள் மாநிலம் தவிக்கிறது, தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டு வரக்கூடாதா? இப்படி தமிழர்களின் நலனில் அக்கறை இருந்தால், ஒன்றிய அரசும் அதைச் செய்யும், மேதகு ஆளுநர் அவர்களும் அதைச் செய்வார்கள். தேசிய ஒருமைப்பாடு இதில் கேள்விக்குறியாகிறது என்பதை மட்டும் அழுத்தமாக உணர வைக்க வேண்டிய அந்த அவசியம் இன்றைக்கு இருக்கிறது.

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2023 அக்டோபர் 9

அதேபோல, ஒரேயொரு கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். நீலகிரி மலையில் உருவாகின்ற தண்ணீர் மோயார் வழியாக கர்நாடகாவிற்குள் செல்கிறது. தமிழ்நாடு அரசு, ஏன் அதைத் தடுத்து நிறுத்தி அணைக் கட்டக் கூடாது? அது எந்த அளவிற்குச் சாத்தியம் என்று எனக்குத் தெரியாது. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். ஆனால், சமூக வலைத்தளங்களில், தமிழ்நாடு அரசு அதைச் செய்யாமல் ஏன் இருக்கிறது என்ற கேள்வியை மக்கள் எழுப்புகிறார்கள். அப்படி ஒரு வாய்ப்பு இருந்தால், நாம் ஏன் அதைச் செய்யக் கூடாது? இத்தனை ஆண்டுகளாக நாம் அவர்களிடத்தில் இந்தக் கோரிக்கையையே வைத்துக் கொண்டிருக்கிறோமே, இதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா? நீலகிரியில் உருவாகிற தண்ணீரை, பவானி நதி வழியாக நமது பகுதிக்கு திருப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதையும் நாம் பரிசீலித்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் பதிவு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அரசினர் தனித் தீர்மானத்தை முழுமையாக, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக நான் வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அற்புதமாகப் பேசினார்கள். என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொன்னார். அப்படித்தான் சொல்ல வேண்டும். நீங்கள் சொல்வது, தேவாலாவில், மேலே அங்கேதான் மழை அதிகமாக இருக்கும். அதிகமான மழை பெய்கின்ற இடம் சிரபுஞ்சி, அதற்கடுத்து தேவாலா ஆகும். தேவாலாவிலிருந்து பெருக்கெடுத்து ஓடுகிற தண்ணீர்தான் சாலக்குடி ஆறாகப் போகிறது. நம்முடைய மாநிலத்திலேயே கொஞ்சம் ஓடுகிறது. பாறைகள்தான் அதை தடுத்துக்கொண்டிருக்கிறது. அதை எடுத்துவிடலாம். Interstate சம்பந்தப்பட்டதாக இருப்பதனால் அப்படி எடுக்க முடியாது. அதையும் பேச்சுவார்த்தையின்போது கவனிக்கிறோம். கேரள மாநிலத்துடன் பேசுகிறபோது அதையும் நாங்கள் கேட்போம். ஏனென்றால், அவர்களுக்கு அந்தத் தண்ணீர் தேவையே இல்லை. கீழே இறங்கி கடலுக்குத்தான் போகிறது. அதைத் திருப்பினால், சரியான திட்டம் என்பதை நானும் உணர்கிறேன்.

2023 அக்டோபர் 9]

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியில் நம்முடைய உரிமையை நிலைநாட்டக்கூடிய வகையிலே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தனித் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கின்றேன். முன்னுரையாக பல தகவல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். வரலாற்றுச் சிறப்பு மிகுந்த வகையிலே கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காவிரிப் படுகைப் பகுதியிலே நெல் உற்பத்தியிலே இந்த அரசு சாதனை புரிந்தது. ஆனால், இந்த ஆண்டு நமக்கு உரிமையான காவிரி நீரை கர்நாடக மாநிலம் தர மறுத்ததன் காரணமாக, ஏறத்தாழ டெல்டா மாவட்டங்களில் மட்டும் 2 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பு அளவுக்குக் குறுவை சாகுபடி கருகி இருக்கிறது. அடுத்து, சம்பா பயிர் சாகுபடிக்கு தயாராகக்கூடிய நிலையில், நம்முடைய உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். யாருக்கும் குந்தகம் வராமல் நடுநிலையாக கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு சிறப்பாக வழிகாட்டுகிறார்கள். ஆனால், அதேநேரத்தில் நடுநிலையோடு செயல்படக்கூடியவர்கள் இந்தக் காவிரி பிரச்சினையில் அரசியல் செய்வது எந்த வகையில் நியாயம் என்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கிறது.*

காவிரியில் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று உச்ச நீதிமன்றமும், காவிரி மேலாண்மை ஆணையமும், காவிரி ஒழுங்காற்றுக் குழுவும் கொடுத்த அந்த அறிவிப்புக்கு எதிராக கர்நாடக மாநிலத்தினுடைய முன்னாள் முதலமைச்சர், இந்நாள் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதுகிறார். அதாவது, காவிரியில் இந்த உத்தரவின்படி நீங்கள் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட கூடாது என்று. தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்துவிட கூடாது என்று கர்நாடகத்தில் இருக்கக்கூடிய பா.ஜ.க. இரண்டு முறை அங்கே கடையடைப்புப் போராட்டத்தை நடத்தி இருக்கிறது. இந்த நிலையில், இதில் நியாயம் கிடைக்கச் செய்வதில் மிக முக்கியமான பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள், தமிழ்நாட்டின் சார்பாக இரண்டு மாநிலங்களுக்கிடையே பிரச்சினைகள்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2023 அக்டோபர் 9 வரும்போது, இந்தியாவிற்குள்ளேயே இருக்கக்கூடிய இந்த இரண்டு மாநிலங்களின் பிரச்சினைகளில் தலையிட்டு, நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள், இதை ஓர் அரசியலாக திசை மாற்றுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. காவிரிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதற்காகத்தான் காவிரி நீர் மேலாண்மை ஆணையம், காவிரி நீர் ஒழுங்காற்று குழு என எல்லாம் அமைக்கப்பட்டன. இந்தக் குழுவினுடைய, ஆணையத்தினுடைய உத்தரவுகளை நமக்கு உரிமை இருந்தும் கர்நாடக மாநிலம் பின்பற்றவில்லை.

காவிரியின் பெரும்பாலான ஓட்டம் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. நாம் கீழே இருக்கின்றோம். சர்வதேச அளவில் பிரம்மபுத்திரா நதியாக இருக்கட்டும், இண்டஸ் நதியாக இருக்கட்டும்; பிரம்மபுத்திரா நதி இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையில் ஓடுகிறது; இண்டஸ் நதியும் அதனுடைய துணை ஆறுகளும் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் ஓடுகின்றன. அங்கேயெல்லாம் ஆணையங்கள் அமைக்கப்பட்டு, இந்த அளவிற்குப் பிரச்சினைகள் வராதபோது, இந்தியாவிலுள்ள இரண்டு மாநிலங்களுக்கு மத்தியிலே மட்டும் இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. நான், இன்னொன்றையும் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ், கர்நாடக மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்து அணைகளும் கொண்டுவரப்பட வேண்டும். அப்போதுதான் நம்முடைய உரிமைகள் மீட்கப்படும். காவிரி டெல்டா விவசாயிகளினுடைய எதிர்பார்ப்பும் இதுவாகத்தான் இருக்கிறது. நிச்சயமாக, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லி, மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக இந்தத் தனித் தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

பிற்பகல் 12–30

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாகக் கொண்டுவந்த தனித் தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்

2023 அக்டோபர் 9] **[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]**

கழகத்தின் சார்பில் நான் முழுமையாக ஆதரிக்கின்றேன். நீர் ஓடுகின்ற திசையிலேயே ஓடும்; காற்று வீசுகின்ற திசையிலேயே வீசும்; அதை யாரும் தடுக்க முடியாது. கடைமடைக்காரனுக்கு முதல் உரிமை என்பது ஒரு நியதி. அதுபோல் கடைமடையில் இருக்கின்ற நமக்கு காவிரி தண்ணீர் ஒழுங்காகக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களும் தமிழ்நாடு அரசும் பலமுறை பல ஏற்பாடுகளைச் செய்திருந்தபோதும், உச்ச நீதிமன்றம், காவிரி நீர் மேலாண்மை ஆணையம், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு, நடுவர் மன்றம் போன்றவை பல முறை அறிவுறுத்தியும், கர்நாடக அரசு அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் திசைமாறிக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, அங்கே இருக்கின்ற நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் வேண்டுமென்றே மேகதாதுவில் அணை கட்டுவோம்; மேல்முறையீட்டுக்குச் செல்வோம் என்று அவர்கள் திசை திருப்பிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இவையெல்லாம் கண்டனத்திற்குரிய செயல்களாகும். ஆகவே, ஒன்றிய அரசு இதில் தலையிட்டு அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். தமிழ்நாட்டிற்குரிய நீர்ப் பங்கீட்டை வழங்க வேண்டும். தமிழக வேளாண்மை மக்களுடைய, தமிழக மக்களுடைய வாழ்வாதாரமாகிய காவிரி நதிநீரில் நம்முடைய பங்கினை ஒழுங்காகக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தனித் தீர்மானத்தை மீண்டும் ஒருமுறை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் முன்மொழிந்திருக்கிற காவிரி நதிநீர் உரிமை பற்றிய தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். கர்நாடகத்தில் இருக்கிற அடிமடையிலிருந்து தமிழ்நாட்டில் இருக்கிற கடைமடை வரை காவிரிக்கான உறவு என்பது வழிவழியான உறவு என்பதனை நம்முடைய தமிழ்நாடு அரசு உணர்ந்து, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் இரு மாநிலங்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த*

[திரு. K. மாரிமுத்து] [2023 அக்டோபர் 9 வேண்டுமென்ற அடிப்படையில் எடுத்திருக்கிற முயற்சிக்கு கர்நாடக அரசு ஆதரவு தெரிவிக்காமல், தேசிய நீர்வளக் கொள்கை மற்றும் கோட்பாடுகளையெல்லாம் மதிக்காமல், இயற்கையினுடைய நியதிகளுக்கு முரண்பட்டு, தன்னார்வத்தோடு, தன்னுடைய சுயநலத்தோடு நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், காவிரி பகுதி குறிப்பாக, டெல்டா பகுதி இன்றைக்குக் கருகிப்போய்க் கிடக்கிறது. இங்கே குளிரூட்டப்பட்ட அவையில் நின்று நான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால், காவிரியினுடைய கடைமடைப் பகுதி, உயிர்போகிற மனிதன் கடைசியாக தண்ணீருக்காகத் தவிப்பதைப்போல, 10 மாதம் தன்னுடைய கருவை சுமந்த தாய் பிரசவிக்கிறபோது ஏற்படுகிற நெருக்கடியில், எப்படி வலியால் தவிப்பாளோ, அதுபோல, குறுவைப் பயிர் அங்கே கதிர் வருகிற நேரத்தில் விக்கிப்போய் நின்று கொண்டிருக்கிறது. எனவேதான், தண்ணீரைப் பெற்றுத் தந்து, அந்தக் கடைமடைப் பகுதியைப் பாதுகாக்க வேண்டுமென்று முயற்சி எடுக்காத, 56 அங்குலம் மார்பளவு கொண்டிருக்கிற இதயமில்லாத ஒன்றிய அரசும், அதேபோல, கொடுக்க மறுக்கிற அடாவடித்தனம் செய்கிற கர்நாடக அரசும் இருந்தாலும், கருணை உள்ளத்தோடு நான் இருக்கிறேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அங்கே பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகையை வழங்கியிருக்கிறார்கள் என்பதனை இங்கே நான் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இங்கே சொல்லக் கடமைப்படுவதெல்லாம் கடைமடைப் பகுதியில் இருக்கிற விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், அவர்களுடைய தொழிலும் இன்றைக்கு நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய பேரியக்கக் கூட்டமைப்பின் சார்பில் வருகிற 11 ஆம் தேதிகூட மிகப்பெரிய அளவில் காவிரி டெல்டா பகுதி முழுவதும் முழு அடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உட்பட தலைவர்கள் அதற்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். காவிரி டெல்டா பகுதியைப் பாதுகாப்பதற்கு இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மீண்டும் ஒருமுறை நாங்கள் ஆதரிக்கிறோம்; வரவேற்கிறோம் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

2023 அக்டோபர் 9]

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுகிற வகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முதலில் நான் மனதார ஆதரிக்கிறேன். காவிரி 800 கி.மீ. தூரம் பயணிக்கிறது. 800 கி.மீ. தூரம் பயணித்து, வங்கக் கடலிலே கலக்கிறது. அந்த 800 கிலோமீட்டரில் 420 கி.மீ. தமிழ்நாட்டிலே பாய்கிறது. 320 கி.மீ. கர்நாடகத்திலே பாய்கிறது. 60 கி.மீ. தமிழகம்–கர்நாடக எல்லையில் பாய்கிறது. ஆகவே, காவிரியில் கர்நாடகத்தைவிட தமிழகத்திற்குத்தான் கூடுதல் சொந்தம் என்கிற முறையில்தான் இதை நான் சொல்கிறேன். ஆகவே, சமீப காலத்தில், காவிரி நீர் தமிழகத்திற்குக் கிடைப்பதிலே, டெல்டா மாவட்டத்திற்குக் கிடைப்பதிலே, ஒரு மிகப்பெரிய சிக்கலை கர்நாடக அரசும், அதை உறுதியாக நின்று பெற்றுத் தரவேண்டிய ஒன்றிய அரசும், இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு ஒரு கேடு விளைவித்திருக்கிற காட்சி அரங்கேற்றிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏராளமான கடிதங்களை ஒன்றிய அரசுக்கு எழுதியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது; காவிரி மேலாண்மை வாரியம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சென்று சந்தித்துப் பேசியிருக்கிறோம்.*

இவ்வளவுக்குப் பிறகும், எது நடந்தால் காவிரியில் தமிழகத்திற்கு இருக்கிற உரிமை கிடைக்கும் என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள் பேசியதுபோல, இன்றைக்கு டெல்டா மாவட்டம் மிகப் பெரிய ஒரு கேள்விக்குறியாக மாறியிருக்கிறது. குறுவை விவசாயம் அநேகமாக முற்றிலும் அழிகிற நிலையில் இருக்கிறது. சம்பா விவசாயம் எப்படி செய்வது என்று விவசாயிகள் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். மழை இல்லை; காவிரி நீருமில்லை, எப்படி விவசாயம் செய்வது என்கிற மிகப் பெரிய கவலையோடு இன்றைக்கு

[திரு. வி.பி. நாகைமாலி] [2023 அக்டோபர் 9 டெல்டா மாவட்ட விவசாயிகள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, காவிரி உரிமையைத் தமிழகத்திற்குப் பெற்றுத் தருகிற உறுதியோடு ஒன்றிய அரசு செயல்படாததன் காரணமாகத்தான், நமக்கு உரிய நீர் கிடைக்கவில்லை என்பதை இந்தத் தனித் தீர்மானம் அழுத்தமாகச் சொல்கிறது. அந்த வகையில் இந்தத் தனித் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், டெல்டா மாவட்ட மக்களின் சார்பிலும் மனதார ஆதரிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருக்கடிகள் சூழ்ந்தபோதும், கொள்கை நெறிப்படியே வாழ்தல் வீரம் என்கிற தமிழர்தம் பண்பாட்டு முழக்கத்திற்கேற்ப நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எவ்வளவோ காயங்கள் இருந்தாலும், கடந்து வந்த பாதையினூடாக பெரும் வலிகளைச் சுமக்க நேர்ந்தாலும்கூட, மிகுந்த கண்ணியத்தோடும், கவனத்தோடும், அதே சமயத்தில் காரிய சாத்தியத்தோடும் முன்மொழிந்திருக்கிற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்தத் தனித் தீர்மானத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே, எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய தலைவர் முனைவர் தொல். திருமாவளவன் சார்பிலே வரவேற்று வாழ்த்துகிறேன்.

ஏதோ விநியோகிப்பவருக்கும், நுகர்வோருக்கும் இடையிலான ஒரு பயன்பாட்டு உறவு அல்ல காவிரிக்கும் நமக்குமான உறவு; அது, பெற்ற தாய்க்கும், பிள்ளைகளுக்கும் இடையிலான ஒரு பண்பாட்டு உறவு. ஒரு குடிமைச் சமூகமாக தமிழ்ச் சமூகம் வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அதற்குப் பின்னாலே காவிரித் தாயின் கருணை இருக்கிறது. சிந்து சமவெளி நாகரிகம் தமிழர்தம் தொன்மையைக் குறிப்பிடுகிறது என்று சொன்னால், காவிரி சமவெளி நாகரிகம் தமிழர்தம் பண்பாட்டின் உச்சத்தை அடையாளப்படுத்துகிறது. வெறும் நெல்லை மாத்திரம் விளைவிக்கிற தாயல்ல, காவிரித் தாய். குடகு மலையில் தொடங்கி பூம்புகார் வரை விரிந்து நடக்கிற நடந்தாய் வாழி காவிரி என்கிற அந்த காவிரித் தாய்தான், சிலப்பதிகாரத்திற்கும், மணிமேகலைக்கும் சொல்லைத் தந்தவள். ஆகவே, அத்தகைய காவிரித் தாயை, ஏக்கத்தோடு இன்று கடைமடை விவசாயிகள் பார்த்துக்கொண்டிருக்கிற நிலையில் இருக்கிறோம்.

2023 அக்டோபர் 9] [திரு. ம. சிந்தனை செல்வன்]

பிற்பகல் 12–40

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இரு மாநிலங்களுக்கிடையிலான பிரச்சினையாகப் பரிணாமம் கொண்ட இந்தக் காவிரிப் பிரச்சினை என்பது காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உருவாக்கப்பட்ட பிறகு, அது இரு மாநில பிரச்சினை அல்ல; அந்த மேலாண்மை ஆணையத்தை உருவாக்கிய ஒன்றிய அரசின் பிரச்சினை. காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிடுகிறது என்று சொன்னால், ஒன்றிய அரசு உத்தரவிடுகிறது என்று பொருள்; உச்ச நீதிமன்றம் உத்தரவிடுகிறது என்று சொன்னால், அந்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டியது ஒன்றிய அரசின் கடமை. ஆகவே, ஒன்றிய அரசுக்கும், அந்த உத்தரவுகளை நிறைவேற்ற மறுக்கிற கர்நாடகாவிற்கும் இடையிலான பிரச்சினையாக இதை நாம் உணர வேண்டியிருக்கிறது. தான் ஆளும், தான் சார்ந்திருக்கிற கட்சிதான் ஒன்றிய அரசை வழிநடத்துகிறது என்கிறபோது, அந்த ஒன்றிய அரசின் சார்பில் உருவாக்கப்பட்டிருக்கிற காவிரி நீர் மேலாண்மை ஆணையம் விடுவித்திருக்கிற உத்தரவை நிறைவேற்றக்கூடாது என்று கர்நாடகாவில் இருக்கிற சில தேசிய கட்சிகள் போராடுவது என்பது வேதனையைத் தருகிறது. தமிழ்நாடு அமைதி காக்கிறது என்று சொன்னால்—ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே கவனத்தோடு வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னார்—அதற்கு அடிப்படை காரணம், எப்போதுமே இந்தியாவின் ஒருமைப்பாட்டிலே தமிழ்நாடு கொண்டிருக்கிற வலுவான நம்பிக்கைதான்; (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் மாண்புமிகு பேரவை தலைவர் அவர்கள் தற்போது சொன்னீர்கள். மாண்பமை மறைந்த தலைவர் முத்தமிழறிஞர் அவர்களும் நம் உறவுகள்தானே என்று சொன்னபோது, இங்கிருந்து சென்று அங்கு வாழ்கிற தமிழர்களை மாத்திரமல்ல; காவிரியை தாய் என்று கருதுகிறோம் என்று சொன்னால், கர்நாடகத்தவரும், தமிழர்களும் பிள்ளைகள்தான்; உறவுகள்தான் என்கிற அடிப்படையில் அவர் சொல்லியிருக்கிறார்.

இந்தத் தருணத்தில் ஒன்றை சுருக்கமாகப் பதிவுச் செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு செயற்கையான வறட்சியை கர்நாடக அரசு, கர்நாடக மக்கள்மீது திணிக்கிறது என்பதை கர்நாடக மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென ஒரு சகோதரனாக

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2023 அக்டோபர் 9

இந்த மாமன்றத்திலிருந்து உங்கள் அனைவரின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீர் மேலாண்மையைப் பாதுகாக்க தவறிய நிலையில், பெங்களூருவில் இருக்கிற நீராதாரங்களையெல்லாம் பாதுகாக்க தவறியதனுடைய விளைவாக ஒரு செயற்கையான வறட்சி உருவாக்கப்பட்டு, அந்தச் செயற்கையான வறட்சியால் ஏற்பட்டிருக்கிற பாதிப்புகளையெல்லாம் காவிரியை நோக்கியும், தமிழகத்தை நோக்கியும் திசை திருப்புகிற கர்நாடகத்தை ஆளுகிற, சில தருணங்களில், இந்தப் பிரச்சினையைத் தூண்டி விடுகிற வெறுப்புவாத கும்பலை கர்நாடக மக்கள் தனிமைப்படுத்த வேண்டும். சாதாரண காலங்களைத் தாண்டி, பேரிடர் காலம், பெருமழைக் காலம், அடர் மழைக் காலம் என்றெல்லாம் புவி வெப்பமயமாதலுக்குப் பிறகு, ஒரு தொடர் பேரிடர் நிலை என்பது உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தொடர் பேரிடர் சூழலை எதிர்கொள்கிற வகையில், தமிழ்நாடு கர்நாடகாவிற்கு வழிகாட்டக்கூடிய வகையில், கர்நாடகாவிற்கு மாத்திரமல்ல, சீனா, ஜப்பான், இஸ்ரேல் உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் வழிகாட்டக்கூடிய வகையில், வேளாண் துறையிலும் புதிய கொள்கைகளை உருவாக்க வேண்டிய காலத்தின் தேவை இருக்கிறது. அதைச் செய்வோம். தமிழக அரசு கொண்டு வந்திருக்கிற, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை மனம் நிறைந்து மீண்டும் வாழ்த்தவும், வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் சொன்னபோது, ஒன்றை நான் உணர்ந்தேன்; அதை மாத்திரம் சொல்கிறேன். காவிரி முட்கள் கிழிக்கிறபோதும், அவள் முகம் சுழிப்பதில்லை; பூ வாசம் வீசுகிற தோட்டங்களின் ஊடாக அவள் பாய்கிறபோதும், அதற்காக ஆனந்தக் கூத்தாடுவதில்லை; அதைப்போல, காவிரியின் குணத்தைப் பெற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கசப்புகளை மறந்து, தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கக்கூடிய வகையில், கடைமடை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதுதான் தேசத்தின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பது (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற உணர்வோடு கொண்டு வந்திருக்கிற, இந்தத் தனித் தீர்மானத்தை மனம் நிறைந்து, வாழ்த்தி, வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

பிற்பகல் 12–45

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினர் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தினுடைய அவசியம் என்பது தமிழகத்திலே ஏதோ முதல் முறையாக இப்போது ஏற்படவில்லை. பல்வேறு காலகட்டங்களில் தமிழகம் இந்த மாதிரியான நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது. ஆனால், அந்த வரலாற்றுக்கெல்லாம் சென்று யார்மீது தவறு, யாரெல்லாம் தவறு இழைத்திருக்கிறார்கள் என்று சொல்ல ஆரம்பித்தால் அதற்குக் காலம் நிறைய எடுக்கும், ஒன்று. இரண்டாவது, இன்றைய சூழலில் இந்தத் தனித் தீர்மானத்தில் ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது என்ற வார்த்தையைச் சொல்கிறார்கள்; இதற்கு முன்பாகப் பேசிய பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் அங்கு இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சியைப் பற்றி ஒரு விமர்சனத்தை வைத்தார்கள். ஆனால், கடந்த முறை பாரதிய ஜனதா கட்சி ஆட்சியிலே, கர்நாடகம் இருந்தபொழுது இம்மாதிரியான சூழல் எதுவும் ஏற்படாமல் இருந்ததற்கான காரணத்தையும் யோசித்துப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) நான் பேசுவதற்கான நேரம் என்று நினைக்கிறேன். ஒரு தேசிய கட்சியாக மிகுந்த பொறுப்புணர்வோடு, விவசாயிகளினுடைய நலனை முன் நிறுத்தி, மத்தியிலே பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான ஆட்சி சட்டப்பூர்வமாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அத்தனையையும் எடுத்தது. இப்போதும்கூட, அங்கு இருக்கக்கூடிய காங்கிரஸ் அரசு, காங்கிரஸ் கட்சி இங்கு இருக்கக்கூடிய ஆளுங்கட்சியோடு கூட்டணியில் இருந்தாலும்கூட, ** ஒன்றிய அரசை வலியுறுத்துகின்றதுபோல ஒரு தோற்றத்தை இங்கு கொண்டுவர இந்தத் தனித் தீர்மானம் முயற்சிப்பதாக நாங்கள் அறிகிறோம். இரண்டாவது, விவசாயிகளுக்காக, இம்மாதிரியான சூழல்களில் அவர்கள் பாதிக்கப்படுகின்றபொழுது (மணியடிக்கப்பெற்றது) கொடுக்கக்கூடிய பயிர்க் காப்பீடு என்கின்ற திட்டம் இந்த முறை. . .*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2023 அக்டோபர் 9*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் சொல்வதுபோன்று, அரசியல் ரீதியாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை. இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஒன்றிய அரசுதான் இதற்குத் தீர்வு வழங்க வேண்டுமென்பதால்தான் வலியுறுத்துகிறோம். அவ்வளவுதான்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கின்ற வாதத்தை நாங்கள் ஏற்கிறோம். ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசு, சுயாட்சியைப் பற்றி தமிழகத்தில் இருக்கின்ற குரலைத் தாண்டி உயர்வான குரல் வேறு எந்த இடத்திலும், மாநிலத்திலும் இல்லை. அப்படிப்பட்ட மாநில சுயாட்சி, மாநில அதிகாரம் என்று பேசுகின்றபொழுது, ஒன்றிய அரசு இம்மாதிரியான நதிநீர் தாவாக்களில் முடிவெடுக்கின்றபோது ஏற்படக்கூடிய சிக்கல் என்பது நாம் அத்தனைபேரும் அறிந்தது. ஆனால், இங்கு இருக்கின்ற இதே ஆளுங்கட்சி, அணை பாதுகாப்பு மசோதா என்கின்ற ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்து, இம்மாதிரியான சிக்கல்களை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு முயற்சி செய்தபொழுது, மாநில அரசினுடைய சுயாட்சி என்று எதிர்த்தது என்ன காரணத்திற்காக? ஆக, இரட்டை நிலைப்பாடுகளை வைத்துக்கொண்டு இந்தத் தீர்மானம் இங்கு வருவது முறையாகுமா?*

மூன்றாவதாக, விவசாயிகளுக்கு இழப்பீடு கொடுப்பதற்கான பயிர்க் காப்பீடு என்பது, இந்த முறை தமிழகத்தில் செய்யாமல்விட்டதன் காரணமாக, அங்கு கிடைக்கக்கூடிய, இன்று மாநில அரசு அறிவித்திருக்கின்ற தொகை என்பது மிகக் குறைவான தொகையாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) விவசாயிகளினுடைய நலனை மனதில் வைத்துக்கொண்டு அவர்களுக்கு முழுமையான. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. ஒரு நிமிடம். நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் பேசுங்கள். அதாவது, காவிரியில் தண்ணீர் தர வேண்டுமென்று ஆணையம் சொல்லிவிட்டது; உச்ச நீதிமன்றம் சொல்லிவிட்டது. அதை நடைமுறைப்படுத்த வேண்டிய ஜல் ஜீவன் அமைச்சர் அவர்களையும் பார்த்து சொல்லிவிட்டார்கள். அதை வலியுறுத்துவதற்கான தீர்மானம்தானே தவிர, இதில் வேறு கருத்துகள் சொல்வதற்கில்லை. நீங்கள் விஷயம் தெரிந்தவர்கள். Insurance வேறு தளத்தில் வருகிறது. அதை ஒன்றிய அரசு கொடுக்கிறது. மாநில அரசு*

2023 அக்டோபர் 9] *[பேரவைத் தலைவர்]*

கொடுக்கிறது. விவசாயிகளின் பங்கும் இருக்கிறது. அந்தத் தனியார் கம்பெனி 100 ரூபாய், 200 ரூபாய் குறைவாகக் கொடுக்கின்றது என்பதுதான் பிரச்சினை. அவற்றையெல்லாம் பேசினால் நீண்ட நேரம் ஆகும். அது வேறு தளத்திற்கும் சென்றுவிடும். ஒன்றிய அரசை வலியுறுத்தி நாம் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். தமிழக பாரதிய ஜனதா கட்சியினுடைய நிலைப்பாட்டை நீங்கள் கர்நாடகத்தில் இருக்கக்கூடிய அந்த மாநிலத்திற்குத்தான்— அங்கு முழுமையாகப் போராட்டம் நடக்கிறது. அங்குள்ள காங்கிரஸ் அங்கு உள்ளவர்களுக்கு ஆதரவாக இருக்கிறது. இங்கு உள்ளவர்கள் உங்களுடைய நிலைப்பாட்டை ஒன்றிய அரசிடம் வலியுறுத்திச் சொல்லுங்கள். இன்னும் சொல்லப்போனால் ஒன்றிய அரசிடம் நீங்களே சொல்லி, தண்ணீர் வாங்கித் தருகிறோம் என்று சொன்னீர்கள் என்றால் மிகவும் சந்தோஷப்படுவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அக்கறையை இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம் முழுமையாகப் பிரதிபலித்தால், ஒரே வார்த்தையில் நீங்கள் சொன்னமாதிரி ஆதரிக்கிறோம் என்று சொல்லி அமர்ந்திருப்போம். ஆனால், நீங்கள் ** அந்தக் காரணத்தை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)*

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து* sorry. *காவிரி நிலைப்பாட்டில் ** எல்லோருமே, எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒத்த குரலாகத்தான் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்திலும் ஏகமனதாகத்தான் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இதில் கருத்தும் இல்லை, ** தயவுசெய்து, இந்தத் தனி தீர்மானத்தை ஆதரித்துப் பேசுங்கள். ஒட்டுமொத்தமாகத் தமிழக மக்களுக்கு நன்மையான காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சி, தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை விவசாயிகளுடைய கருத்தை, மக்களுடைய கருத்தை*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திருமதி வானதி சீனிவாசன்] [2023 அக்டோபர் 9

ஆதரிக்கிறது; ஒத்துப்போகிறது. விவசாயிகளுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தே கிடையாது. விவசாயிகளுக்காக, நீராதார உரிமைகளுக்காகத் தமிழக பாரதிய ஜனதா கட்சி எந்த நிலையிலும் முழுமையாக உடன் இருக்கும். ஆனால், இந்தத் தீர்மானம் என்பது முழுமையாக இந்தக் கருத்தை வலியுறுத்துகின்ற மாதிரி இல்லாமல், ** என்பதற்காகக் கொண்டு வருவதாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வார்த்தைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) இந்த வார்த்தைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னேன்; கருத்துகள் பரவலாக இங்கே பேசப்படலாம். ஆனால், தீர்மானம் எந்த வடிவிலே போடப்பட்டிருக்கிறது என்பதை தீர்மானத்தைப் படித்தாலே அவர்கள் புரிந்துகொள்வார்கள். இருந்தாலும், ** (மேசையைத் தட்டும் ஒலி) அதை அவர் மறந்துவிட வேண்டாம். எனவே, அவர் பேசிய அந்த உரையை, நான் பேசிய உரையுடன் சேர்த்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இந்த அவையில் ** இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று நீங்கள் கூறியதை உண்மையிலேயே யாருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லி, அமருங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நதி நீருக்காக (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து நான் கூறுவதைக் கேட்டுவிட்டு, உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். நான் உங்களைப் பேசவிடுகிறேன். நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை வாசித்தபோது, நீங்கள் அதைக் கேட்டீர்கள். அதில், ** தற்போது, ஒன்றிய அரசில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அவர்களைத்தான் வலியுறுத்துவார்கள். அதை வலியுறுத்தித்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் எந்த ** நான் பேசிய எல்லாவற்றையும் நீக்கிவிடுகிறேன். தயவுசெய்து நீங்கள் ஆதரித்து அமர்ந்தால் நல்லது.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, விவசாயிகளுடைய நலனில் முழுமையான உணர்வுகளோடு நாங்கள் இருக்கிறோம். நீண்ட அனுபவம் வாய்ந்த மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்திலே மிகுந்த அனுபவம் பெற்றவர். ஓர் அரசியல் பிரச்சினைக்கோ, ஓர் அரசாங்கத்தின் பிரச்சினைக்கோ நிரந்தரத் தீர்வு என்பதை நோக்கிய நகர்வுதான் என்றும் வரலாற்றிலே குறிப்பிடத்தக்கதாக இருக்கும். அந்த வகையில், இந்தத் தீர்மானத்திலே நதிகளை தேசியமயமாக்க வேண்டும் என்பதையும், அணை பாதுகாப்பு மசோதாவிற்கு ஆதரவு தெரிவிக்கிறோம் என்பதையும் சேர்த்து இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக இருந்திருந்தால், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொல்கிற* subject *வேறு. தமிழக மக்களுக்குக் காவிரி நீரை திறந்துவிட வேண்டுமா, வேண்டாமா? உங்கள் கட்சியினுடைய நிலைப்பாட்டை மட்டும் சொல்லுங்கள், போதும்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினைக்கு* bit, bit *ஆக* solution *கொடுக்க முடியாது. கொடுத்தால் நிரந்தரத் தீர்வைக் கொடுக்க வேண்டும்; நிரந்தரத் தீர்வை நோக்கி நகர வேண்டும்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2023 அக்டோபர் 9*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் காவிரி நீரை அவர்கள் திறக்க வேண்டாம் என்பதில் உறுதியாக இருக்கிறீர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படித்தானே! அப்படி எடுத்துக்கொள்ளலாமா?*

திருமதி வானதி சீனிவாசன்: *நிச்சயமாக அப்படியில்லை. அப்படி இருந்திருந்தால், கடந்த ஐந்தாண்டுக் காலம் கர்நாடக மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியிலிருந்தபோது இம்மாதிரியான சூழ்நிலை எதுவும் எழவேயில்லையே! பிறகு எவ்வாறு நீங்கள் இப்படி சொல்ல முடியும்? (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தனித் தீர்மானத்தின் நகல் நேற்றைக்கு முந்தைய தினமே உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதில், ஏதேனும் திருத்தம் தேவைப்படுமாயின், அதை நீங்கள் எழுத்து மூலமாகத் தெரிவித்திருந்தால், அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தத் திருத்தத்தைச் செய்திருப்போம்; இல்லையெனில், அதற்குப் பதில் சொல்லியிருப்போம். உச்ச நீதிமன்றமும், காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையமும் கூறியதற்குப் பிறகும் கர்நாடகத்திலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. காவிரி நீரைத் திறந்து விட வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தித்தான் இன்றைக்கு இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. உங்கள் முடிவை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இது* debate *அல்ல.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு மனம் இருந்தால், இப்போதே இந்தத் தீர்மானத்தில் இந்த வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளலாம். அதில் எந்தவிதமான தடையும் கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) அதனால். . .*

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த அரசுக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. இந்தப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா என்பதைச்*

2023 அக்டோபர் 9] [பேரவைத் தலைவர்]

சொல்ல வேண்டும். அதேபோல் நீங்கள் சொல்வதைப்பற்றி பேச வேண்டிய இடம் நாடாளுமன்றம். நாடாளுமன்றத்தில் இங்கிருந்து 39 உறுப்பினர்களும், பாண்டிச்சேரியிலிருந்து 1 உறுப்பினரும் என மொத்தம் 40 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் அதுகுறித்து நாடாளுமன்றத்தில் பேசுவார்கள். அதேபோல் ராஜ்யசபா உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; அவர்களும் அதுகுறித்து நாடாளுமன்றத்தில் பேசுவார்கள். தீர்மானத்தில் அதை கொண்டுவரவில்லை. இல்லாத தீர்மானத்திற்கு இங்கே பேசுவது, போகாத ஊருக்கு வழி காட்டுவது மாதிரி. தண்ணீர் வேண்டுமா, வேண்டாமா என்பதை மட்டும் இங்கே சொல்லுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம், நதிகளை தேசியமாக்குவதற்கு எதிர்ப்பானது அல்ல. உடன்பாடுதான். போதுமா!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் என்பது ஒரு முழுமையான தீர்வை நோக்கிய ஒரு தீர்மானமாக இல்லாத காரணத்தினாலும், எங்கள் கோரிக்கைகளான இவையெல்லாம் சேர்க்கப்பட வேண்டுமென்பதும் தீர்மானத்தில் இல்லை. இந்தத் தீர்மானத்தில் அவையெல்லாம் சேர்க்கப்படும் என்ற வாக்குறுதி கொடுத்தால், நாங்கள் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காவிரி தண்ணீர் தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையில்லை; நாங்கள் கர்நாடகம் பக்கம்தான் இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், நீங்கள் பேசலாம்.*

[*2023 அக்டோபர் 9*

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு குரல்வளை அறுவை சிகிச்சை நடைபெற்ற நேரத்தில் மனிதாபிமானத்தோடும், நட்புணர்வோடும் அரசியல் மாச்சரியங்களையெல்லாம் மறந்து, உடல்நலம் விசாரித்து, ஆறுதல் கூறிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும்,எதிர்க்கட்சித்தலைவர் அவர்களுக்கும்,முன்னாள் அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களான சகோதர சகோதரிகளுக்கும், ஊடக நண்பர்களுக்கும் முதலில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடல்நலம் விசாரித்தவர்கள், ஆறுதல் கூறியவர்கள் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவித்த வாய்க்குத் தண்ணீர் வேண்டும்; தாகம் தீர்க்க தண்ணீர் வேண்டும்; தஞ்சை தரணியைக் காக்க தண்ணீர் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, தமிழ்நாட்டின் உரிமையைக் காப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். ஏதோ, இதை மேம்போக்காகப் பார்க்கக்கூடிய தீர்மானமாக யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. தஞ்சை தரணி என்பது, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம். வான் பொய்ப்பினும், தான் பொய்யா பொன்னி நதி என்று போற்றப்படும் காவிரியில் தமிழ்நாட்டின் உரிமை மறுக்கப்படுகிறது என்ற நிலையில், அதிலும் குறிப்பாக நாளை ஒரு நாள் மட்டுமே மேட்டூர் அணையிலிருந்து டெல்டாவிற்கு தண்ணீர் திறக்கப்படும் நிலை; நாளை மறுநாள் முடியாது என்கிற சூழல், இரண்டு நாட்கள் கழித்து, காவிரி ஆணையம் மீண்டும் கூட்டப்படுகின்ற ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை நெஞ்சார வரவேற்கிறேன். இதனை நிறைவேற்ற வேண்டுமென்று நான் முழுமையாக ஆதரிக்கிறேன்.

2023 அக்டோபர் 9] [திரு. ஜி.கே. மணி]

அதே நேரத்தில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல் கட்சிகளை மறந்து, தமிழ்நாடு ஒரே குரலில் ஒலிக்கிறது. தமிழ்நாட்டின் உரிமையைக் காப்பதற்கு தமிழ்நாட்டிலிருக்கிற எல்லோரும் ஒன்றாக நிற்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் பின்னால் அணி வகுக்கிறோம் என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். அதோடு சில உண்மை தகவல்களை இந்த மாமன்றத்தில் முன்வைக்க விரும்புகிறேன். பொதுவாக, காவிரி பிரச்சினை என்று வந்தாலே, தமிழ்நாடு ** நிற்கின்ற அவலநிலைக்குத் தள்ளப்படுகின்றது.

பிற்பகல் 1-00

இப்பொழுது மழை அளவு குறைந்தது என்று சொன்னாலும்கூட, ஓர் உண்மையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மேட்டூர் அணை தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களுக்குப் பாசனத்தைக் கொடுக்கிற அணை. அதோடு, தலைநகர் சென்னை உள்ளிட்ட 26 மாவட்டங்களுக்குக் குடிநீர் ஆதாரத்தைக் கொடுக்கிறது மேட்டூர் அணை; காவிரி ஆறு. மேட்டூர் அணையினுடைய கொள்ளளவு 99 டி.எம்.சி. ஆக இருக்கிற நிலையில், இப்போது இருக்கிற தண்ணீர் வெறும் 8.2 டி.எம்.சி. அளவு ஆகும். இன்றைக்கும் மேட்டூர் அணையிலுள்ள தண்ணீரின் அளவு 8.2 டி.எம்.சி. ஆகும். இதில் திறந்து விடுவது 1,000 கன அடி தண்ணீர்; 2,000 கன அடி தண்ணீர் என்று வைத்துகொண்டாலும்கூட இன்னும் ஒரிரு நாட்களுக்கு மட்டுமே டெல்டா பகுதிகளுக்குத் தண்ணீர் திறந்துவிட முடியும். திறக்கவில்லை என்று சொன்னால், டெல்டா விவசாயிகள் நாங்கள் வாழ்வதா! மறைவதா! என்ற கேள்விக்கு ஆளாகக்கூடிய நிலை. டெல்டா விவசாயிகளுடைய நிலை ஒரு பக்கம்; அப்படி மேட்டூர் அணைத் திறப்பதைத் தடுத்து நிறுத்திவிட்டால், தாகம் தீர்க்க 26 மாவட்டங்களுக்குத் தண்ணீர் வேண்டும். தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு குடிப்பதற்கு மட்டும் 1000 கன அடி தண்ணீர் தேவை. 1000 கன அடி தண்ணீர் தேவையென்று சொன்னால், ஒரு மாதத்திற்கு இரண்டரை டி.எம்.சி. தண்ணீர் குடிநீருக்கு மட்டும் தேவைப்படுகிறது. இதே நிலை நீடித்தால், இன்னும் இரண்டொரு மாதங்களில் தமிழ்நாடு குடிநீர்ப் பிரச்சினையில் தள்ளாடக்கூடிய நிலை ஏற்படும் என்பதுதான் மேட்டூர் அணையின் நிலை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜி.கே. மணி] [2023 அக்டோபர் 9

மேட்டூர் அணையின் நிலை ஒரு பக்கம் இப்படி இருக்கிற நேரத்தில், நமக்குத் தண்ணீரை வழங்குகிற கர்நாடக மாநிலத்தின் அணைகளின் நிலையினை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கர்நாடகாவில் ஹேமாவதி, ஹேரங்கி என்ற இரண்டு அணைகளிலேயிருந்து கிருஷ்ணராஜ சாகருக்கு தண்ணீர் வருகிறது. கிருஷ்ணராஜ சாகர் அணையிலிருந்தும், கபினி அணையிலிருந்தும்தான் நமக்குத் தண்ணீர் வழங்குகிறார்கள். இன்றைய நிலவரப்படி, கிருஷ்ணராஜ சாகர் அணையின் கொள்ளளவு மொத்தம் 49 டி.எம்.சி., பயன்பாடு 45 டி.எம்.சி., அதில் இருப்பு 23 டி.எம்.சி. ஆகும். ஏறக்குறைய மொத்த கொள்ளளவில் 50 விழுக்காடு டி.எம்.சி. தண்ணீர் கிருஷ்ணராஜ சாகர்-KRS அணையில் இருக்கிறது. கபினி அணையினுடைய கொள்ளளவு 19 டி.எம்.சி. ஆகும். அந்த 19 டி.எம்.சி. கொள்ளளவில் இன்றைய நிலவரப்படி 15 டி.எம்.சி. தண்ணீர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 75 விழுக்காடு தண்ணீர் அந்த அணையில் இருக்கிறது. ஆக, இரண்டு அணைகளிலும் சேர்த்து மொத்தம் 68 டி.எம்.சி. கொள்ளளவில், அவர்களிடத்தில் இருப்பது 38 டி.எம்.சி. ஆக, 57 விழுக்காடு தண்ணீர் இன்று அவர்கள் கையில் இருக்கிறது. நம்மிடம் இருப்பது வெறும் 8.6 டி.எம்.சி. மட்டும்தான். ஆக, 57 விழுக்காடு தண்ணீரை வைத்துக்கொண்டு நமக்குத் தண்ணீர் தர மறுக்கிறார்கள். நாம் ** நிற்கிற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்ற சூழலிலேதான் இந்த உரிமை காக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று இந்த அவையில் இருக்கிற அனைவரையும் நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தனித் தீர்மானத்தைப் பாட்டாளி மக்கள் கட்சி முழுமையாக ஆதரிக்கிறது.

பிற்பகல் 1-05

அதேநேரத்தில் இந்தப் பிரச்சினையில், அடுத்து நாம் செல்ல வேண்டிய நிலை என்று பார்த்தால், கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக காவிரியில் போராடுகிறோம், ** நிற்கிறோம். இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக அமைவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் நான் வேண்டுகோளாக முன் வைக்க விரும்புவது,—பக்ரா வடிநிலப் பகுதி இருக்கிறது. அந்தப் பக்ரா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 அக்டோபர் 9] [திரு. ஜி.கே. மணி]

வடிநிலப் பகுதியிலே உள்ள ஹிமாச்சல்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களில் இதேபோன்ற சிக்கல் வந்த நேரத்தில், சிக்கல் வரக்கூடாது என்பதற்காக அங்கு இருக்கக்கூடிய எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, நதிநீர் ஆணையத்தின் கட்டுப்பாட்டிலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, கிருஷ்ணராஜ சாகர்-KRS அணையாக இருந்தாலும், கபினி அணையாக இருந்தாலும், மேட்டூர் அணையாக இருந்தாலும், ஹேமாவதி அணையாக இருந்தாலும், ஹேரங்கி அணையாக இருந்தாலும் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் வர வேண்டும். இப்போது நடுவர் மன்றம் இறுதி தீர்ப்பு வழங்கியது. அதனைக் கர்நாடக மாநிலம் மதிக்கவில்லை; உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் மதிக்கவில்லை. தற்போது, கடைசியாக காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது. 24,000 கன அடி நீர் வேண்டுமென்று கேட்டோம். கொடுக்கவில்லை, மறுத்தார்கள். 10 ஆயிரம் கன அடி நீர் கேட்டோம், மறுத்தார்கள்; 5 ஆயிரம் கன அடி நீர் கேட்டோம், மறுத்தார்கள்; உச்ச நீதிமன்றம் 3 ஆயிரம் கன அடி நீர் திறந்து விட வேண்டுமென்று சொன்னது, அதையும் மறுத்துவிட்டார்கள். என்ன நிலைமை என்பதை நாம் பார்க்க வேண்டும். கர்நாடகம் பிடிவாதமாக இருக்கிறது என்று சொன்னால், இதைத் தீர்க்க வேண்டியது மத்திய அரசுதான். மத்திய அரசு உடனடியாகக் கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்பது தீர்மானம்.

அடுத்து காவிரியில் இருக்கக்கூடிய அணைகளையெல்லாம் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். அதோடு இது தொடர்பான வேறு பிரச்சினை. மேட்டூர் அணை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்ட ஆண்டு 1925. 99-வது வருடம் நடந்து கொண்டிருக்கிறது. அடுத்த வருடம் மேட்டூர் அணைக்கு நூற்றாண்டு ஆகும். எனவே, மேட்டூர் அணையின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேநேரத்தில், இப்போது 31.2 அடிதான் தண்ணீர் இருக்கிறது. அதாவது, 8 டி.எம்.சி. தான் இருக்கிறது. இதில், 23 சதவிகிதம் வண்டல் மண், சேறு சகதியாக உள்ளது. இந்த நேரத்தில் எல்லாவற்றையும் ஆழப்படுத்த வேண்டும்.

[திரு. ஜி.கே. மணி] [2023 அக்டோபர் 9

ஏனென்றால், தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது. அணைகளை ஆழப்படுத்தினால் தண்ணீர் சேமிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மேட்டூர் அணையைப் புனரமைக்கும் பணியை மேற்கொள்ள முயற்சி எடுக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை நெஞ்சார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்து முன்மொழிந்திருக்கிறார்கள். இந்திய தேசிய காங்கிரஸ் அதை வழிமொழிகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தோளோடு தோள் நின்று இதில் வெற்றி பெறுவதற்கு உங்களோடு இருக்கிறது என்ற உறுதியை அளிக்கிறது.

காவிரி ஆறு என்பதை சுலபமாக, easy ஆக கடந்துவிட்டுச் செல்ல முடியாது. உலகிலே நைல் நதிக்கரை, அமேசான் நதிக்கரை போன்று பல நதிக்கரைகள் இருக்கின்றன. இந்தியாவில், பிரம்மபுத்திரா, கோதாவரி, கங்கை போன்று பல ஆறுகள் ஓடுகின்றன. 6 ஆயிரம் கிலோ மீட்டருக்கு அதிகமாக ஓடுகின்ற உலகப் புகழ்பெற்ற நைல், அமேசான் போன்ற நதிகள் இருந்தாலும், இந்தியாவில் 2 ஆயிரம் கிலோ மீட்டருக்கு அதிகமாக ஓடுகின்ற கங்கை போன்ற ஆறுகள் இருந்தாலும், உலகப் புகழ்பெற்ற ஒரு வரலாற்றுச் சிறப்பு நம்முடைய காவிரிக்கு இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், தமிழர்களுடைய மிகச் சிறந்த நீர் மேலாண்மையைப் போற்றி வல்லுநர்களும் காவிரியினுடைய பெருமையை எழுதியிருக்கிறார்கள்; ஆங்கிலேயர்களும் எழுதியிருக்கிறார்கள். தமிழர்களும் அதில் வரலாற்றுச் சிறப்புமிக்க பதிவுகளைச் செய்திருக்கிறார்கள்.

குறிப்பாக, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு. ராமசாமி அவர்கள் காவிரியைப் பற்றி எழுதும்போது, அதாவது, மூன்று இலட்சம் ஆண்டுகளாக அது எப்படி ஓடியது என்பதையும், 25 ஆயிரம் ஆண்டுகளாக வரலாற்றுத் தமிழர்களுக்கு

2023 அக்டோபர் 9] [திரு. கு. செல்வபெருந்தகை]

இந்தக் காவிரியில் என்ன பங்களிப்பு இருக்கிறது என்பதையும் மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கும்போது, காவிரி கர்நாடகா மாநிலத்துக்குச் சென்றுவிட்டது. எனவே, அவர்கள் இதை ஏதோ ** கொடுப்பதாகக் கருத முடியாது. இது நம்முடைய தார்மீக உரிமை. தமிழ்நாட்டுக்கு அவர்கள் தண்ணீர் கொடுப்பது—நம்முடைய உரிமையைத்தான் நாம் கேட்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களை எப்படி கண்ணை இமை பாதுகாப்பதுபோல் பாதுகாத்து வருகிறார்களோ, அப்படி டெல்டா பகுதி விவசாயிகளையும் பாதுகாத்து வருகிறார்கள். ஒன்றிய அரசு உதவி செய்யவில்லை என்றாலும், தமிழ்நாடு அரசினுடைய நிதி நெருக்கடி மோசமாக இருந்தாலும், அவர்களுக்கு நிவாரணத் தொகையைத் தொடர்ந்து அளித்து வருகிறார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அந்த இந்திய அரசமைப்புச் சட்டத்தின்பால் இந்த அரசு, ஒன்றிய அரசு இயங்கிக் கொண்டிருக்கின்றன. உச்ச நீதிமன்றம் ஓர் ஆணையைப் பிறப்பிக்கிறது; வழிகாட்டுதலைச் சொல்கிறது. அது காவிரி மேலாண்மை ஆணையம் ஆகட்டும், அதற்கு எந்தப் பெயராவது வைக்கட்டும். அதை நடைமுறைப்படுத்துவது யார் என்ற கேள்விதான் எழுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாதுர்யமாக, திறமையாக இந்தத் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். படித்தவர்கள்கூட, சட்டம் படித்தவர்கள்கூட இது புரியாமல் பேசுகிறார்களா; இல்லை, தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்வாதாரத்தையும், உரிமையையும் பாதுகாப்பதில் தவறுகிறார்களா என்ற எண்ணம் எனக்குத் தோன்றுகிறது. இந்திய அரசமைப்புச் சட்டம், உச்ச நீதிமன்றம், ஒரு வாரியத்தை, மேலாண்மை ஆணையத்தை ஏற்படுத்துகிறது. அது ஓர் ஆணை வழங்குகிறது. அது என்ன காகிதக் கப்பலா அல்லது பேப்பர் டைகர் என்று சொல்கிறார்களே அப்படி நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இது இந்திய அரசமைப்புச் சட்டத்தின்பால் வருகின்ற ஒரு வழிமுறை. இந்த வழிமுறையை மதிக்க மாட்டேன் என்று ஒரு மாநிலத்தில் சொல்கிறார்களென்றால், யார் இதற்கு அழுத்தம் கொடுக்க முடியும்? ஒன்றிய அரசுதான் அழுத்தம் கொடுக்க முடியும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 அக்டோபர் 9 பிற்பகல் 1–10

எதற்கெடுத்தாலும் இராணுவத்தை வைத்து நாங்கள் நடைமுறைப்படுத்துவோம் என்று சொல்கிறார்களே, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தீர்ப்புகளையும் இராணுவத்தை வைத்து நடைமுறைப்படுத்துவோம் என்று சொல்வதுதானே உலகிற்கு ஒரு செய்தியாக அமையும். இதை எதற்காக மறுக்கிறார்கள்? ஆகவே, இந்தத் தீர்ப்பை உடனே, ஒன்றிய அரசு நிறைவேற்ற வேண்டும். இதை முன்மாதிரியாக உலகிற்கு ஒரு செய்தியாக பதிவு செய்ய வேண்டும்.

எங்கு பார்த்தாலும், நீரின்றி அமையாது உலகம் என்று தலைவர்கள் பேசுகிறார்கள், தமிழ்நாடு மட்டும் நீரின்றி அமையுமா என்ற கேள்வியை நாங்கள் இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அப்படியென்றால், தமிழ்நாடு என்ன மாற்றாந்தாய் கொடுமைகளுக்கு ஆளானதா? ஆகவே, இதைப் பேசும்போது குறிப்பாக, கர்நாடகா மாநிலத்தில் அந்த முதலமைச்சர் கொண்டு வருகின்ற தீர்மானத்திற்கு ஒட்டுமொத்த இயக்கங்களும் உறுதுணையாக இருக்கின்றன. அங்கே யாரும், கிண்டல், ஏளனம் பேசவில்லை. ஒத்த உணர்வு கொண்டு இருக்கின்றார்கள். தமிழ்நாட்டு மக்களும், தமிழ்நாட்டு கட்சிகளும் அதே உணர்வோடு இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகத் தாழ்மையான வேண்டுகோளை இங்கே பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–வது நூற்றாண்டில், முகலாயப் பேரரசு ஆட்சி நடந்தபோது, நைல் நதிக் கரையிலே ஒரு பகுதி உடைந்துவிட்டது. இந்தியத் திருநாட்டிற்கு எகிப்திலிருந்து வருகின்றார்கள், உலகத்தில் எங்கும் தேடிவிட்டோம். நீர் மேலாண்மைக்கு புகழ்பெற்ற ஓர் இடம் எங்கேயாவது இருக்குமா என்று? அப்போது கேட்கின்றபோது–மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தச் செய்தி நன்றாகத் தெரியும்; சிரித்துக்கொண்டே கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். Arthur Carter என்பவர் அந்தக் குழுவின் தலைவராக வருகின்றார். நீங்கள் தமிழ்நாட்டுக்குச் செல்லுங்கள்; அவர்கள்தான் நீர் மேலாண்மைக்கும், நீர் வழிகாட்டுதலுக்கும், பொறியியலுக்கும் சொந்தக்காரர்கள் என்று சொல்கிறார். ஆக, உலகத்திலே இப்படிப்பட்ட பெருமைக்குரியவர்கள் தமிழர்கள், அந்த வழித்தோன்றலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

2023 அக்டோபர் 9] [திரு. கு. செல்வபெருந்தகை]

இன்றைக்குத் தமிழ்நாட்டை வழிநடத்திக்கொண்டிருக்கின்றார். ஆக, இதிலும் அவர் வெற்றி பெறுவார் என்று நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்கின்றேன். உலகில் நீரியல் வல்லுநர்கள், தமிழர்களின் அறிவுசார்ந்த மரபின் சாட்சிகளாக விளங்கிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இது நம்முடைய உரிமை. இது ** இல்லை. அவர்கள் ஏதோ கொடுக்கிறேன் என்று கொடுப்பதற்கு, ** கொடுப்பதற்கான சூழலும் ஏற்படவில்லை. நம்முடைய உரிமையை நாம் பெற்றாக வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஒழுங்குமுறை கூட்டத்தில், முதலில், 10-8-2023 அன்று ஓர் உத்தரவு போடுகிறார்கள். மீண்டும் அதைத் திரும்பப் பெறுகிறார்கள். ஆகவே, உச்ச நீதிமன்றத்தை மதிக்கின்றார்களா? மேலாண்மை ஆணையத்தை மதிக்கின்றார்களா? இவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்ற மிகப் பெரிய ஒரு கேள்வி எழுகிறது.

எதற்கெடுத்தாலும், வாய் திறக்கும் நம்முடைய ஆளுநர்கூட இதில் வாய் திறக்காமல் இருக்கிறார்கள். ஓர் அநீதி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எதையெல்லாமோ பேசுகின்றார்; எல்லாவற்றிலும் விவாதம் செய்கின்றார்; தமிழ்நாட்டு உரிமையைப் பாதுகாப்போம்; நீரைப் பெற்றுத் தருவதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்துவேன் என்று இதுவரை மேதகு ஆளுநர் அவர்களும் வாய் திறக்கமாட்டேன் என்கின்றார். இதுதான் மிகவும் வருத்தமான செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீர் உரிமை என்பது தமிழகத்திற்குத் தர வேண்டியது, அவர்கள் கொடுத்தேயாக வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏற்கெனவே நாம் 14 டி.எம்.சி. தண்ணீரை பறிகொடுத்திருக்கின்றோம். இனிமேலும் பறிகொடுப்பதற்கு ஒன்றுமில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, இந்த உரிமையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலைநிறுத்துவார், கொண்டு வருவார், வெற்றி பெறுவார். காங்கிரஸ் பேரியக்கம் அவரோடு சேர்ந்து போராடும் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[*2023 அக்டோபர் 9*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

***திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதுசம்பந்தமாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, சில கருத்துகளை இங்கே பதிய வைக்க விரும்புகின்றேன். காவிரி நதி தமிழகத்தின் ஜீவ நதி. காவிரி நதிநீர் மக்களின் உயிர்நாடி. காவிரி நதி விவசாயிகள் மற்றும் 20 மாவட்ட மக்களுக்குக் குடிநீர் ஆதாரமாக விளங்கக்கூடிய ஒரு பிரதான நதி. காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து இந்த மாமன்றத்தில் பலமுறை விவாதம் நடத்தியிருக்கின்றோம். காவிரி நீர் சம்பந்தமாக பலமுறை தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அதில் விவாதம் நடத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நேற்றைக்கல்ல, இது 50 ஆண்டு கால பிரச்சினை. இந்த 50 ஆண்டு கால பிரச்சினையில் நம்முடைய விவசாயிகளுக்கு நன்மை கிடைப்பதற்காக அப்போது ஆண்ட கட்சிகளெல்லாம், தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி செயல்பட்டதன் விளைவாக ஒரு நல்ல தீர்ப்பை நாம் பெற்றோம்.*

பிற்பகல் 1–15

1990 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற ஆணையின்படி காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. உச்ச நீதிமன்ற ஆணையின்படி மத்திய அரசால் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு, இதற்கொரு தீர்வு ஏற்படுவதற்கு அப்போது வழி வகுக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியது. அதோடு 10–12–1991 அன்று நடுவர் மன்ற இடைக்கால ஆணை அரசிதழில் வெளியிடப்பட்டது. 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால், நடுவர் மன்ற இடைக்கால ஆணையைச் செயல்படுத்துவதற்கான அமைப்பை ஏற்படுத்த மத்திய அரசுக்கு ஆணையிடக்கோரி ஓர் அசல் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், கடந்த காலத்தில் எவ்வளவு போராட்டம் எற்பட்டது என்பதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இதை நான் தெளிவுப்படுத்துகின்றேன்.

2023 அக்டோபர் 9] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததால் அதனை வலியுறுத்தி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வீற்றிருந்தபொழுது, 1993 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதிவரை சுமார் 84 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு நீரைப் பெறுவதற்காக தன் உடலை வருத்தி உண்ணாவிரதம் இருந்தார்கள். மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் உத்தரவினை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்கள் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்கள்.

11-8-1998 அன்று மத்திய அரசு இடைக்கால ஆணையைச் செயல்படுத்துவதற்கு காவிரி நதிநீர் ஆணையம் மற்றும் காவிரி கண்காணிப்புக் குழு அமைத்து ஆணையிட்டது. 5-2-2007 அன்று நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையைப் பிறப்பித்தது. அப்போது மாநிலத்திலும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்தியிலும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அங்கம் வகித்தது. ஆணையைப் பிறப்பித்தவுடனேயே, அதை உடனடியாக அரசிதழில் வெளியிட்டிருக்கலாம். காலம் தாழ்த்தியதன் காரணத்தினால் அன்றைய தினம் கர்நாடகா, கேரள அரசாங்கங்கள் காவிரி நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பிற்கு உச்ச நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றுவிட்டன.

2011 முதல் 2013 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட அன்றைய மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மேதகு ஜனாதிபதி அவர்களிடம் தொடர்ந்து கடிதம் மூலமாக வலியுறுத்தி வந்தார்கள். உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 19-2-2013 அன்று நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட செய்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும் நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு மத்திய அரசு செயல்வடிவம் கொடுக்காமல், காலதாமதம் செய்த காரணத்தால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உச்ச நீதிமன்றம் 16-2-2018 அன்று இறுதித் தீர்ப்பினை வழங்கியது. இத்தீர்ப்பில் காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்பது பற்றி விரிவாகத் தெரிவிக்கப்பட்டது. மத்திய அரசு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வழங்கிய தினத்திலிருந்து 6 வார காலத்திற்குள்

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 அக்டோபர் 9 ஓர் அமைப்பை ஏற்படுத்தாவிட்டால் எக்காரணத்தைக் கொண்டும் காலக்கெடு நீட்டிப்பு செய்யப்படமாட்டாது என்று உச்ச நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை அளித்தது.

உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பின்மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து, 22-2-2018 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டமும், 15-3-2018 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் இறுதி ஆணையைச் செயல்படுத்த சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மத்திய அரசு செயல்படுத்த காலம் தாழ்த்திய காரணத்தினால் 31-3-2018 அன்று மத்திய அரசுமீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்தது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுமட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள், 22 நாட்கள் அவையை ஒத்தி வைக்கின்ற அளவிற்குச் (மேசையைத் தட்டும் ஒலி) செயல்பட்டார்கள் என்பதையும் இந்த நேரத்தில் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி பல போராட்டங்களின் விளைவாக 1-6-2018 அன்று மத்திய அரசு, காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் நீர்முறைப்படுத்தும் குழு செயலாக்கத் திட்டம் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. அதன்படி ஒவ்வோர் ஆண்டும் மாதாந்திர அடிப்படையில் தமிழகத்திற்கு 177.25 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், கர்நாடக அரசு நமக்கு வழங்க வேண்டிய தண்ணீரை காவிரியில் திறந்துவிடுவதுதான் நியாயம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலும் இதை இணைத்துக் கொண்டிருக்கலாம். இப்போதுகூட திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். இதையும் இணைத்துக் கொண்டால் சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். காவிரி நீர் சம்பந்தமாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி கர்நாடக அரசு காவிரியில் தண்ணீரைத் திறக்க வேண்டும். இதில் யாருக்கும் பாதிப்பு இல்லை. இது ஏற்கெனவே உச்ச நீதிமன்றம், காவிரி மேலாண்மை ஆணையம் இவையெல்லாம் தெரிவித்த கருத்து. ஆகவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி நியாயமாக நமக்குக் கிடைக்கவேண்டிய

2023 அக்டோபர் 9] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

நீரை கர்நாடக அரசு திறந்துவிடாதது சரியல்ல. ஆகவே, இந்தத் தீர்மானத்தில் இதையும் இணைத்துக்கொண்டால் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒரு முறை நான் வாசிக்கின்றேன், 'காவிரி நீர் சம்பந்தமாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி கர்நாடக அரசு காவிரியில் தண்ணீரைத் திறக்க வேண்டும்.' அதை வலியுறுத்த வேண்டுமென்று அந்தத் தீர்மானத்திலே தெரிவிக்க வேண்டும். மேலும், நான் கடந்த மூன்று மாதங்களாக. . .

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தீர்மானமே அதுதானே!*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *திறந்துவிட வேண்டும். நீங்கள் மத்திய அரசை வலியுறுத்திச் சொல்கிறீர்கள். ஆனால் தண்ணீர் எங்கிருக்கிறது; கர்நாடக அரசிடம்தான் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தெரிந்துகொள்வதற்காகச் சொல்கிறேன். நாம் ஒன்றிய அரசை ஏன் வலியுறுத்துகிறோம் என்றால், மாநில அரசு நடைமுறைப்படுத்தாததால்தான் மாண்புமிகு அவை முன்னவர் அனைத்து கட்சிக்காரர்களையும் அங்கு அழைத்துக்கொண்டு சென்று ஜல் சக்தி அமைச்சர் அவர்களைப் பார்த்தார்கள். ஒன்றிய அரசு உத்தரவிடச் சொல்வதற்கு நாம் சொல்கிறோம் அவ்வளவுதான்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, மத்திய அரசு அளித்த தீர்ப்பு அல்ல. உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஏன் தடை செய்கிறது கர்நாடக அரசு. அதைத்தான் நான் இங்கு வலியுறுத்துகிறேன். அதனால்தான் இந்தத் தீர்மானத்தில் இதை இணைத்துக் கொண்டால் சரியாக இருக்குமென்று நான் தெரிவிக்கின்றேன். நாம் இதில் ஒன்றும் தவறாகக் குறிப்பிடவில்லை. ஏற்கெனவே அளித்த தீர்ப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை, நீங்கள் சொன்னதை (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தீர்மானத்தைப் படிக்கிறபோது தெளிவாகப் படித்திருக்கிறேன். "மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, தமிழ்நாட்டிற்குத் தண்ணீரைத் திறந்து விடுமாறு கர்நாடக*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 அக்டோபர் 9

அரசிற்கு உத்தரவிட ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது" என்று தீர்மானத்தை நான் முன்மொழிகிறபோது தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்ன தீர்மானம் ஏற்கெனவே அங்கு வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: கர்நாடகம் திறக்க வேண்டுமென்று அதில் தெரிவிக்கப்படவில்லை. சரி right. மேலும், நான் கடந்த மூன்று மாதங்களாக இந்த அரசினுடைய கவனத்திற்குப் பத்திரிக்கைகளின் வாயிலாகவும், ஊடகங்களின் வாயிலாகவும் தெரிவித்து வந்தேன். டெல்டா பாசனத்திற்குத் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று எச்சரித்து, ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க பலமுறை அறிக்கை, பேட்டியின் வாயிலாக வலியுறுத்தினேன். நான் தெரிவித்த கருத்துகளை * அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதுமட்டுமல்ல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. தயவு செய்து எந்த இடத்திலும் ** என்று சொல்லாதீர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: அதாவது இப்படியெல்லாம் பிரச்சினை வரும், தண்ணீர் பிரச்சினை வரும், இதற்கு முன்கூட்டியே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கருத்துகளை தெரிவித்தேன். ஏழாவது மாதத்திலிருந்து கொடுத்து கொண்டிருக்கிறேன். விவசாயிகள் பயிரிட்ட பயிர்களெல்லாம் கருகிவிட்டதே! இதற்கு யார் பொறுப்பு? ஆகவே, பிரதான எதிர்க்கட்சி அறிக்கையின் வாயிலாக, பேட்டியின் வாயிலாகக் குறிப்பிடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தகவலுக்காகச் சொல்கிறேன், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பதற்காக இல்லை. எல்லோருடைய கருத்தும் காவிரியில் தண்ணீர் திறக்க வேண்டுமென்பது, யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. முயன்ற அளவுக்கு ஒரு நிமிடம்கூட ஓய்வு இல்லாமல் முயற்சி செய்திருக்கிறார்கள். அதனால் அந்த வார்த்தையை மட்டும் நீங்கள் கொஞ்சம் வாபஸ் பெற்றுக்கொண்டால் நல்லது. நீங்கள் மற்ற எல்லாம் சொல்லுங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 அக்டோபர் 9]

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Correct. *இல்லை நீங்கள் சொன்னது அவ்வளவும் சொன்னீர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே எல்லா பதிலையும் சொல்லிவிடுகிறீர்கள். பிறகு நான் என்ன சொல்வது? மத்திய, மாநில மையங்களின் கருத்துகளைக் கேட்கவில்லை, இந்த அரசாங்கம். அவற்றின் கருத்துகளின் அடிப்படையில்தான் அறிக்கைகள் விட்டேன். பல தகவல்களைச் சேகரித்துத்தான் அறிக்கைகள் விட்டேன். ஆகவே, தண்ணீர் பிரச்சினை ஏற்படும். இதற்கு முன்கூட்டியே ஏற்பாடுகள் செய்யுங்கள். தண்ணீரைத் திறந்துவிட்டால் மட்டும் போதாது. அந்தப் பயிர்கள் விளைச்சல் பெறும் வரையில் முழுமையாகத் தண்ணீர் கிடைக்க வேண்டும். அதற்கு என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுதான் நான் அறிக்கையின் வாயிலாக, பேட்டியின் வாயிலாகத் தெரிவித்தேன். அதைத்தான் நான் இப்போது சொல்கிறேன். அதை நாம் கடைபிடித்திருந்தால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *யாரும் மறுக்கவில்லை. நீங்கள் சொன்னது அவ்வளவும் வரும்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதைத்தான் நான் சொல்கிறேன். வேறெதுவும் நான் சொல்லவில்லை. எங்கே, பேசவே விடமாட்டேன் என்கிறீர்களே! இடையில், இடையில் brake போடுகிறீர்களே! அதுமட்டுமல்ல, பெங்களூருவில் INDIA கூட்டணிக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். தமிழகத்தில் குறுவை சாகுபடிக்குத் தேவையான நீர் போதுமான அளவில் மேட்டூர் அணையிலே இல்லை; ஆகவே, எங்களுக்கு மாதந்தோறும் வழங்கவேண்டிய நீரினை வழங்குங்கள் என்று நட்பின் அடிப்படையில் அங்கு இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய முதலமைச்சர், காங்கிரஸ் கட்சியினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் ஆகியோரைக் கேட்டிருந்தால் நமக்கு நிச்சயமாகத் தண்ணீர் கிடைத்திருக்கும் என்று விவசாயிகள் எண்ணுகிறார்கள். அதைத் தெரிவிப்பது என்னுடைய கடமை.*

[*2023 அக்டோபர் 9*

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்* Prime Minister*–ஐப் பார்க்கும்போது சொல்லியிருக்கலாமே என்று அவர்கள் சொல்வார்கள்; தேவையில்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இதில் என்ன தவறு இருக்கிறது? தவறு ஏதும் இல்லையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Prime Minister*–ஐப் பார்க்கும்போது கேட்டீர்களா? நன்றி, நீங்கள் சொல்லியிருந்தால் நன்றி.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஒவ்வொரு முறையும் பேட்டியில் பாருங்கள். அதுமட்டுமல்ல, 22 நாட்களாக விவசாயிகளுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகக் குரல் கொடுத்தது அ.தி.மு.க. கட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தவர்; இந்த இலாகாவினையும் பார்த்தவர். அவருக்கு நன்றாகத் தெரியும். இப்போது அவர் பேசியதில் அவர் கருத்தைச் சொன்னார். இப்போது கடைசியாக என்ன சொன்னார் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெங்களூரு போனார்கள். அங்கிருக்கிற* Chief Minister*, மற்றவர்களோடு பேசக் கூடாதா என்று கேட்டார். இதைத்தான் அவர்கள் எதிர்ப்பார்க்கிறார்கள். உங்களுக்கே தெரியும்; பேசினால் என்னவாகுமென்று உங்களுக்கே தெரியும். காரணம் பல ஆண்டுக்காலம் பேசி, பேசிப் பார்த்து முடியாத காரணத்தால்தான் நாம் நீதிமன்றத்திற்குச் சென்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு கர்நாடகம் என்ன சொன்னது? நாங்கள் பேசித் தீர்த்துக்கொள்கிறோம். இப்போதுதான் அதைச் சொல்கிறது. அப்போது என்னவாகுமென்றால், இந்தமாதிரி ஏதாவது* case*-ல், நாம்* Supreme Court *போகிறோம் என்றால் உடனே என்ன சொல்வார்கள்? நாங்கள் பேசி தீர்த்துக்கொள்கிறோம் என்று சொல்வார்கள். உடனே நீதிபதி,*

2023 அக்டோபர் 9] [திரு. துரைமுருகன்]

'Let us go' *என்று சொல்வார்கள். 'பேசி முடித்துக்கொள்ளுங்கள்' என்று தள்ளுபடி செய்துவிடுவார்கள். ஆகையினால், ** நீங்கள் பேசுவது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்றையும் சொல்கிறேன். ஆகையினால், நம்முடைய உரிமையை அடகு வைப்பதற்குச் சமம். நம்முடைய அறியாமையினுடைய அடையாளம், அவர்களிடம் பேசச் சொல்வது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொன்ன வார்த்தை சரியான வார்த்தை இல்லை. அப்படிப்பட்ட கட்சிகளோடு ஏன் நீங்கள் கூட்டணி வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிகாரம், ஆட்சி பெற வேண்டும். தமிழ்நாட்டு மக்களைப் பற்றி உங்களுக்குக் கவலை இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *கூட்டணி என்பது வேறு. நம்முடைய உரிமை என்பது வேறு. யாராக இருந்தாலும் சரி; தாயாக இருந்தாலும், பிள்ளையாக இருந்தாலும் வயிறு வேறு, வேறுதான். அவர்கள் கட்சியாக இருக்கலாம்; இன்னொரு கட்சியாக இருக்கலாம். அதுபற்றி அக்கறை இல்லை. கேரளாவில் கம்யூனிஸ்ட், காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகள் மாறி மாறி ஆட்சி நடத்துகின்றன. ஆனால், அவர்களுக்கும் தனித் தனி கொள்கை உண்டு. ஆகையினால், இது ஒரு* common programme.

INDIA *அணி சேர்ந்திருக்கிறது என்றால், நம்முடைய கொள்கைகளையெல்லாம் விட்டுவிட்டு, அவர்களுடைய கொள்கைகளையெல்லாம் விட்டுவிட அல்ல. அது ஒரு* common programme. *பிஜேபியை எப்படி ஆட்சியிலிருந்து இறக்குவது, அதைப் பற்றிப் பேசுவது என்பது அந்தக் கூட்டணியினுடைய நோக்கம். அதை விட்டுவிட்டு இதையெல்லாம் கேட்க வேண்டும் என்பதல்ல.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2023 அக்டோபர் 9*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இன்றைய, நேற்றைய பிரச்சினை இல்லை; இது 50 ஆண்டுக்காலப் பிரச்சினை. விவசாயிகள் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களைப் பேச வேண்டாம் என்று சொல்லவில்லையே! மணி ஆகிவிட்டது. நிறைவாகக் கொண்டு வாருங்கள் என்றுதான் சொல்கிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் சொல்கிறேன். 22 நாட்கள் நம்முடைய உரிமையைப் பெறுவதற்காக நாடாளுமன்றமே ஒத்திவைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் போராடினோமா இல்லையா? நீங்கள் ஒரு நாள்கூட நாடாளுமன்றத்தில் போராடவில்லையே! மத்திய அரசுக்கு அழுத்தமே கொடுக்கவில்லையே?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அன்றைய தினம் பாராளுமன்றத்தில் பாரதிய ஜனதா கட்சியின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலிருந்து காப்பாற்றுவதற்காக எடுத்த நடவடிக்கையே தவிர, தமிழகத்திற்காக அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நீங்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்ததை நான் ஒன்றும் மறுக்கவில்லை. எதை மறுக்க வேண்டுமோ அதை மட்டும்தான் மறுத்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

2023 அக்டோபர் 9]

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலே இருக்கிறார்கள். ஏன் இந்தக் காவிரி பிரச்சினையை எழுப்பவில்லை? ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை? ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை? பிறகு, எதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையைப் பற்றி நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் பேசவில்லை என்று இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார். திமுக உறுப்பினர்கள் பேசியதை நிரூபிக்கவா? (மேசையைத் தட்டும் ஒலி) பேசியிருப்பதை நிரூபிக்கவா? இல்லாதது, பொல்லாததையெல்லாம் சொல்லக் கூடாது. நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் பேசவில்லை என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதுதான் மரபா? நாங்கள் நாடாளுமன்றத்தில் பேசவில்லை என்று எந்த ஆதாரத்தை வைத்து நீங்கள் சொல்கிறீர்கள்?*

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அதெல்லாம் தெரியாதவர் அல்ல. அவருக்கு எல்லாம் தெரியும். இந்த நேரத்தில், இங்கே இந்தக் குழப்பம் இருக்கிறது இல்லையா? அதில் அது மறந்து போயிருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்தைத் திசை திருப்ப வேண்டாம். நம்முடைய உரிமைகளைக் காப்பதற்காக நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 அக்டோபர் 9 நீங்கள் பேசிவிட்டால் போதுமா? நாடாளுமன்றத்தில் உங்களுடைய உறுப்பினர்கள் 38 பேர் இருக்கிறார்கள், இல்லையா? நாடாளுமன்ற அவையை ஒத்திவைக்கலாம், இல்லையா? அவ்வாறு அழுத்தம் கொடுத்ததால்தான், காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டன. அதுமட்டுமல்ல; காலதாமதம் செய்த காரணத்தினாலே, மத்திய அரசுமீது நாங்கள் அவமதிப்பு வழக்கைத் துணிச்சலோடு தொடர்ந்தோம். அந்தத் துணிச்சலை உங்களிடத்தில் காணவில்லையே! பார்க்க முடியவில்லையே! (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணிச்சலைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) துணிச்சல் பற்றி எங்களுக்குத் தெரியும். அதையெல்லாம் இந்த அவையில் சொல்லி, அவை மரபை மீறவேண்டிய அவசியமில்லை. நிச்சயமாக, உறுதியாக, காவிரிப் பிரச்சினைக்காகப் பலமுறை நாடாளுமன்றத்தில் நாங்கள் குரல் எழுப்பி இருக்கிறோம்; பலமுறை நாடாளுமன்றத்தை நடத்த முடியாத அளவிற்கு நாங்கள் பிரச்சினையை எழுப்பியிருக்கிறோம். அதனை நிரூபிப்பதற்கு நான் தயாராகயிருக்கிறேன். எத்தனையோ பிரச்சினைகளில் நாங்கள் அவ்வாறு செய்திருக்கிறோம். அதற்கெல்லாம் ஆதாரங்கள் இருக்கின்றன. சட்டமன்றத்தில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக நாங்களெல்லாம் அமைதியாக அமர்ந்திருக்கிறோம். அதற்காக எதை வேண்டுமென்றாலும் பேசிவிடலாம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதுகிறாரா? (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் கருத்து சொல்வதற்கு—நாங்கள் கேட்பதற்குத் தயாராக இல்லை. நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். விவசாயிகளுடைய குறைகளைப் பற்றி பேசுவதற்கு*

2023 அக்டோபர் 9] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இது ஜனநாயக நாடு. ஆகவே, ஜனநாயக முறைப்படி நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, நான் குறுக்கிட்டு, 'ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள்?' என்று கேட்டேனா? தவறான தகவலைச் சொல்லாதீர்கள்; அது தவறு என்று சொல்லி அதை மறுக்கிறேனே தவிர, நான் வேறொன்றையும் சொல்லவில்லை. உங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. இங்கேயிருக்கின்ற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற உரிமைகளை நான் தடுக்க விரும்பவில்லை. அதில் நுழைவது முறையுமல்ல; மரபுமல்ல. அது உங்களுக்கு இருக்கக்கூடிய உரிமை. ஆனால், தவறான கருத்துகளை இந்த அவையில் பதிவு செய்யும்போது, அதனை மறுப்பது என்னுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான அழுத்தத்தைக் கொடுத்தால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அதைத்தான் நான் வலியுறுத்திக் குறிப்பிடுகிறேன். இதில் என்ன தவறு இருக்கிறது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்பிரச்சினையில் எல்லோரும் சேர்ந்து அழுத்தம் கொடுப்போம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். வேறொன்றுமில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தபொழுது, இதேபோல் காவிரி நீர்ப் பிரச்சினை*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 அக்டோபர் 9 வந்தபோது 22 நாட்கள் நாடாளுமன்றத்தில் அழுத்தம் கொடுத்த காரணத்தினால்தான், இப்பிரச்சினைக்கு மத்திய அரசு ஒரு தீர்வைக் கண்டது. அதுபோல் நீங்கள் செயல்பட வேண்டுமென்றுதான் நாங்கள் கோரிக்கை வைக்கிறோம். இதில் என்ன தவறு இருக்கிறது? எந்தத் தவறும் கிடையாதே!

அதுமட்டுமல்ல, டெல்டா மாவட்டங்களில் இந்த ஆண்டு சுமார் 5 இலட்சம் ஏக்கர் பரப்பில் நடவு செய்திருந்தார்கள். தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக சுமார் 3 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை நெல் சாகுபடி கருகி, விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் எக்டேருக்கு ரூ.13,500/– மட்டும் நிவாரணத் தொகையாக அளித்திருப்பது போதாது. குறுவை சாகுபடிக்கு பயிர்க் காப்பீடு செய்திருந்தால், ஏக்கர் ஒன்றுக்கு ரூ.35,000/– கிடைத்திருக்கும். இந்த அரசு குறுவைச் சாகுபடியை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்காத காரணத்தினால், விவசாயிகள் கடும் நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்கள். ஆகவே, அந்த இழப்பீட்டுத் தொகையையும் அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தேசிய பேரிடர் நிவாரண நிதி (NDRF) 2023 ஆம் ஆண்டு இழப்பீட்டுத் தொகையை எக்டேருக்கு ரூ.13,500/–லிருந்து ரூ.17,000/–ஆக உயர்த்தியிருக்கின்றது. ஆனால், அந்த இழப்பீட்டுத் தொகையைக்கூட அரசு அறிவிக்கவில்லை. இதனை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, ஓர் எக்டேருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.20,000/– என அறிவித்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, குறுவை சாகுபடி செய்த விவசாயிகள் பாதிக்கப்படுகின்றபொழுது, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைத்தது; ஓர் எக்டேருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.84,000/– கிடைத்தது. ஆனால், இந்த அரசு குறுவை சாகுபடியைப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சேர்க்காத காரணத்தினால், நஷ்டத்திற்குள்ளான விவசாயிகளுக்கு அந்த இழப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைக் கவனத்தில்கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான நிவாரணத்தை உயர்த்தி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2023 அக்டோபர் 9] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

அதேபோல, சம்பா மற்றும் தாளடிப் பயிர்களுக்குத் தண்ணீர் தேவை. அதற்காக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதையும் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1–35

இன்றைய தேதியில் கர்நாடகத்தில் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மட்டும் 66 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. ஆனால், அவர்கள் நமக்குத் தண்ணீர் கொடுக்க மறுக்கின்றார்கள். அதனால்தான், அதனையும் இந்தத் தீர்மானத்தில் இணைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தினேன். ஆகவே, இவ்வளவு தண்ணீரை வைத்துக்கொண்டும், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, காவிரி மேலாண்மை ஆணையம் அளித்த தீர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கர்நாடக அரசு செயல்படவில்லை. இன்றைக்கு தேசிய கட்சிகள், இங்கிருக்கின்ற காங்கிரஸ் கட்சி தண்ணீர் திறக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. கர்நாடகாவில் ஆளுகின்ற காங்கிரஸ் அரசாங்கம் அதைக் கொடுக்க மறுக்கின்றது. இங்கிருக்கின்ற பாரதிய ஜனதா கட்சி, தண்ணீர் திறக்க வேண்டும் என்று கேட்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம் என்று சென்றுவிட்டார்களே?

திரு. எடப்பாடி K. பழனிசாமி: கர்நாடகாவில் இருக்கின்ற பாரதிய ஜனதா கட்சி, தண்ணீர் திறக்கக் கூடாதென்று கூறி போராட்டம் நடத்துகிறது. ஆகவே, கர்நாடகா மாநிலத்தைப் பொறுத்தவரையில், தேசிய கட்சிகள்தான் மாறி மாறி ஆண்டுகொண்டிருக்கின்றன. ஆகவே, நாம் கவனமாக இருந்து அதற்குத் தேவையான அழுத்தத்தைக் கொடுத்தால்தான், இதற்கான தீர்வு காணப்படும்; (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும் என்பதைத்தான் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அது மட்டுமல்ல, இன்றையதினத்திலிருந்து கிட்டத்தட்ட இன்னும் 6 மாதங்கள் உள்ளன. பருவ காலங்களில் மட்டும்தான் தண்ணீர் கிடைக்கும். தென்மேற்கு பருவமழை வந்தால்தான் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்புள்ளது. 6 மாத காலம் கழித்துதான் மேட்டூர் அணைக்கே தண்ணீர் கிடைக்கும். இந்த 6 மாத காலத்திற்கு மக்களின் குடிநீர்த் தேவைக்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? மாதந்தோறும் 20

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 அக்டோபர் 9 மாவட்ட மக்களுக்கு 4 டி.எம்.சி. தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டும். காவிரி நதியிலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது அக்டோபர் மாதம். அணைக்கட்டில் இதுநாள் வரையில் அக்டோபர் மாதம் 32 அடியில் நீர்மட்டம் இருந்தது கிடையாது. நீர்மட்டம் குறைந்துவிட்டது. அது மட்டுமல்ல, அதிலும் 25 சதவிகித தண்ணீர் சேரும், சகதியுமாக இருக்கின்றது. மீதியளவில்தான் தண்ணீர் இருக்கின்றது. இந்தத் தண்ணீரை வைத்து 20 மாவட்ட மக்களுக்கு எப்படி 6 மாத காலம் தண்ணீர் வழங்கப்படவிருக்கிறது என்பதை அரசு யோசித்து செயல்பட வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோன்று சம்பா மற்றும் தாளடிப் பயிர்கள் நடவு பாதிக்கப்பட்டதால், அங்கிருக்கின்ற விவசாயிகளின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த விவசாயப் பெருமக்களுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும். அத்துடன் நெல் உற்பத்தியும் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. நெல் உற்பத்தி பாதிக்கப்படும் நேர்வில் அரிசியின் விலை உயரும் வாய்ப்பு உருவாகும். மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலும், விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் போதுமான அளவில் நீர் கொண்டுவந்து சேர்க்கப்பட வேண்டும். வேளாண்மைக்குத் தேவையான நீர் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். எனவே, இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரித்தாலும், இந்த அரசு முழு மனதோடு செயல்பட்டால்தான் நம்மால் நீரைப் பெற முடியும். மத்தியில் ஆட்சி மாறி மாறி வந்தாலும், கர்நாடகத்தில் தேசிய கட்சிதான் ஆண்டுகொண்டிருக்கின்றது. எந்த ஆட்சி வந்தாலும் நமக்குத் தண்ணீர் கிடைப்பதில் சிரமம் உள்ளது. ஆகவே, நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பணியாற்றி, கர்நாடகாவிலிருந்து தண்ணீரைப் பெறுவதற்குண்டான முயற்சியை எடுப்பதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி எப்போதும் துணை நிற்கும் என்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போற்றுதலுக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் காவிரிப் பிரச்சினைக் குறித்து தனித் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். இந்தத் தீர்மானத்தின்மீது இந்த மாமன்றத்தில் இருக்கின்ற தலைவர் பெருமக்கள், தங்களுக்குரிய கருத்துகளை, நல்ல ஆலோசனைகளோடு தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் மைய கருத்தாக வெளியில் போக வேண்டும் என்று முதலில் கேட்டுக்கொண்டிருந்தேன். அந்தக் கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினால்கூட, அவர்களது உரையின் கடைசியில் முடிக்கிறபோது, தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று கூறியதற்காக நான் தனியாக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், எனக்கு இதுபோன்ற விவாதங்களெல்லாம் புதியதல்ல. 1989 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் காலத்திலேயே முதன்முதலாக இந்தத் துறையை நான் எடுத்திருந்தேன். அதன் பிறகு எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் இந்தத் துறையைத்தான் நான் வைத்திருப்பேன். இந்த முறையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆக, கிட்டத்தட்ட 25 ஆண்டுக்காலமாக இந்தத் துறையை நான் கையாண்டு வருகிறேன். காவிரி பிரச்சினையின் ஆரம்பக் கட்டத்தின்போதெல்லாம் Tribunal கேட்பதுதான் முக்கியமான பணியாக இருந்தது. அன்றிலிருந்து இன்றுவரையில், இதன் வரலாற்றை நான் அறிவேன். இதன் ஊடே ஊடே நான் வளர்ந்திருக்கிறேன். கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், Thiru. J.H. Patel அவர்கள் முதல் தற்போது முதலமைச்சராக இருக்கின்ற திரு. சித்தராமையா அவர்கள் வரையில் அனைத்து முதலமைச்சர்களுடனும் இது குறித்து நான் பேசியிருக்கிறேன்; விவாதித்திருக்கிறேன்.

பிற்பகல் 1–40

அதேபோன்று கேரள மாநிலத்தின் முல்லைப் பெரியாறு அணை. அதுகுறித்தும் கேரள மாநிலத்திலுள்ள பல அமைச்சர்களைச் சந்தித்திருக்கிறோம். அடுத்து, கிருஷ்ணா நதி நீர் குறித்தும் ஆந்திராவிலுள்ள திரு. என்.டி. இராமாராவ் முதல் திரு. பாஸ்கர் ராவ் வரை எல்லோரையும் சந்தித்திருக்கிறோம்.

[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 9

ஆக, 3 மாநிலங்களிலிருந்தும் தண்ணீர் கேட்கிற வேலைதான் நமக்கு இருக்கிறது. அவற்றில் நமக்கு உரிமை உண்டு. அந்தப் பிரச்சினைகளில் சில நேரங்களிலே ஓர் அணுகுமுறையைக் கையாள வேண்டியிருக்கிறது. ஆனால், சில நேரங்களிலே மேலே இருக்கிறவர்கள், தண்ணீர் அவர்களிடமிருந்து வருகிறது என்பதற்காகவே, ஏதோ அவர்கள் மேல்நிலையில் இருப்பவர்கள் போலவும், இங்கே நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னதைப்போன்று நாம் ** கேட்பது போலவும் நினைக்கிறார்கள். உச்ச நீதிமன்றம் சொன்னாலும் கேட்பது இல்லை.

முல்லைப் பெரியாறில் முழு கொள்ளளவில் தண்ணீர் நிரப்ப வேண்டும் என்று கேட்டபோது, என்ன சொன்னார்கள்? நீங்கள் baby dam-ஐக் கட்டும் பணியை நிறைவேற்றிவிட்டு, 152 அடி வரை தண்ணீரை நிரப்பிக் கொள்ளுங்கள் என்றார்கள். Baby dam-ஐ நாம் கட்ட வேண்டும். Baby dam-ஐக் கட்ட வேண்டுமானால் அதற்குத் தேவையான மணல், கல் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு போக வேண்டும். அதற்கு அனுமதிக்க முடியாது என்று வனத் துறையினர் கூறிவிட்டார்கள். கிட்டத்தட்ட ஆட்சிக்கு வந்ததிலிருந்து போராடியதன் விளைவாக, இப்போதுதான் வண்டியின்மூலம் பொருட்களை எடுத்துக்கொண்டு போகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். சரி, அப்பொருட்களை எடுத்துச் சென்று baby dam-ஐக் கட்டலாம் என்றால், baby dam கட்டும் இடத்திற்கு முன்னால் 20 மரங்கள் இருக்கின்றன. அவை வனத் துறையின்கீழ் வருகின்றன; ஆகையால், அந்த 20 மரங்களை வெட்ட விடமாட்டோம்; அவற்றில் கை வைக்கக் கூடாது என்கிறார்கள். நல்ல காலம் புயலினால் 10 மரங்கள் கீழே விழுந்துவிட்டன. இன்னும் சில மரங்கள்தான் நிற்கின்றன. ஆகையால் இப்படி கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

அதேமாதிரி பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் நிலை என்ன? ஆனைமலையாறு-நல்லாறு திட்டம் எப்போதோ முடிந்திருக்க வேண்டும். நான் இதுவரையில் இரண்டு முறை அனுப்பிவிட்டேன். ஆனைமலையாறு-நல்லாறு திட்டத்தை நிறைவேற்றினால்தான் PAP-யினுடைய பலனை நாம் அனுபவிக்க முடியும். அதற்காக அவர்களோடு நாம் வாதாடிக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 அக்டோபர் 9] [திரு. துரைமுருகன்]

*கொண்டிருக்கிறோம். இவை எல்லாவற்றையும்விட விடாக்கண்டன் கொடாக்கண்டனாக இருப்பது கர்நாடகம். அவர்களோடும் நாம் வாதாடிக்கொண்டிருக்கிறோம். அவர்களிடம் நாம் என்ன கேட்கிறோம்? தண்ணீர் கொடு என்று கேட்கிறோம். நாம் அவர்களிடம் ** கேட்கவில்லை. அந்தத் தண்ணீரைக்கூட எப்போது கேட்கிறோம்? அவர்களிடம் தண்ணீர் கேட்டால் என்ன சொல்கிறார்கள்? 'எங்களிடமே தண்ணீர் இல்லை; நாங்கள் எப்படி கொடுப்பது' என்கிறார்கள்.*

இப்போது உதாரணத்திற்குச் சொல்கிறேன்; 10-9-2022 அன்று KR சாகரில் 96.69% தண்ணீர் இருந்தது; இன்றைக்கு 47.60% இருக்கிறது. கபினியில் போன வருடம் இதே நாளில் 93.28% தண்ணீர் இருந்தது; இன்றைக்குக் கபினியில் 27.38% இருக்கிறது. ஹேரங்கியில் போன வருடம் 78.47% தண்ணீர் இருந்தது; இன்றைக்கு 89.45% இருக்கிறது. ஹேமாவதியில் போன வருடம் 98.05% தண்ணீர் இருந்தது; இன்றைக்கு 53.86% இருக்கிறது. இவை கர்நாடகா அணைகளில் இருக்கிற தண்ணீரின் நிலவரமாகும். மேட்டூரில் போன வருடம் 95.61% தண்ணீர் இருந்தது; இன்றைக்கு 8.61% இருக்கிறது. ஆகவே, அவர்கள் இவ்வளவு தண்ணீர் வைத்திருப்பதால்தான் நாம் தண்ணீரைக் கேட்கிறோம். கர்நாடகாவிலுள்ள 4 அணைக்கட்டுகளின் இன்றைய சராசரி தண்ணீர் அளவு 66.226 டி.எம்.சி.; அதாவது 57% தண்ணீர் இருக்கிறது. மேட்டூர் அணையிலுள்ள தண்ணீரின் அளவு 8.5%தான். ஆக, அங்கு தண்ணீர் இல்லாமல் இல்லை; கொடுக்க வேண்டும். நிறைவாக தண்ணீர் இருக்கும்போது, தண்ணீர் கேட்டால், கொடுத்துவிடுகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

பிற்பகல் 1-45

சரி, தண்ணீரின் அளவு குறைந்து போனால் என்ன செய்ய வேண்டும்? தண்ணீரை pro rata basis-*ல் கொடுக்க வேண்டும். எவ்வளவு தண்ணீர் இருந்தாலும், ஒரு கை அளவு தண்ணீர் இருந்தாலும்கூட, அதில் நமக்கு பங்கு உண்டு. அதை* pro rata basis-*ன்படி கொடுத்தாக வேண்டும். அதைக் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் சொல்கிறது. ஆனால், அது நடைமுறையில் இல்லை. அதற்காக நீதிமன்றத்தில் என்ன சொல்கிறோம், நாங்களே எல்லாவற்றையும் பார்க்க முடியாது—*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 9

அதற்காக Cauvery Water Management Authority என்ற அமைப்பைப் போட்டிருக்கிறார்கள். Regulation Committee என்ற அமைப்பை அதன்கீழ் போட்டிருக்கிறார்கள். அந்த Authority-ன் Chairman-க்கு அந்த power-ஐக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால்-அந்த Committee-க்கு இத்தனை நாட்கள் Chairman-னே இல்லாமல் இருந்தது. நாங்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்ததையடுத்து, இப்போதுதான் Chairman-ஐ நியமித்திருக்கிறார்கள். அவர்கள் டெல்லியில் உட்கார்ந்து பேசினால், 'தமிழ்நாடு' என்று சொன்னாலே குறைத்துதான் பதில் சொல்வார்கள். ஆனால், நீதிமன்றத்தில் கேட்கிறபோது கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே, உச்ச நீதிமன்றத்தையே மதிக்காத ஒரு போக்கு நாட்டில் நிலவுமானால், ஒன்றிய அரசு இதைப் பார்த்துக் கொண்டிருக்குமானால், பிறகு இந்த நாட்டிலே தேசிய ஒருமைப்பாடு எங்கே போய் நிற்கும்? எங்களுடைய உரிமை இது.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசியபோது, எனக்கே நெஞ்சம் உலர்ந்துவிட்டது. நான் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன்; அங்கிருக்கிற பாசன முறை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பாசன முறை பற்றி எனக்குத் தெரியும். காவிரி, வெண்ணாறு, வெட்டாறு உள்ளிட்ட ஆறுகள் பற்றி எனக்குத் தெரியும். தஞ்சாவூரிலுள்ள ஓர் ஊரின் பெயரைச் சொன்னால், அந்த ஊரிலுள்ள ஆறுகளைப் பற்றி நான் சொல்வேன். அதேபோன்று, அங்குள்ள ஆறுகளைப் பற்றிச் சொன்னால், ஊரைப் பற்றிச் சொல்வேன். அரசலாறு என்றால் கும்பகோணம் போ; நசுவினி ஆறு என்றால் பட்டுக்கோட்டைக்குப் போ; கோரையாறு என்றால் திருத்துறைப்பூண்டிக்குப் போ என்று ஆற்றைப் பற்றி சொன்னால் ஊரைப் பற்றி சொல்வேன். தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆறுகள் மற்றும் ஊர்கள் பற்றி அவ்வளவு நன்றாகத் தெரியும். கடந்த 25 ஆண்டுகளில் என்னை தலைவர் கலைஞர் அவர்கள் அவ்வாறு வடித்திருக்கிறார்கள். ஆனால், தண்ணீர் இல்லையென்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று, நெல் பயிரிடுவது. அவர்கள் சாப்பிடுவது சோறுதான்; அவர்களுக்குக் கூழ் குடிக்கத் தெரியாது; தஞ்சாவூர் மக்களுக்குக் கூழ் தயாரிக்கத் தெரியாது; களி சாப்பிடத் தெரியாது. அவர்களுக்குக் கேழ்வரகு பயிரிடத் தெரியாது; மக்காச்சோளம்

2023 அக்டோபர் 9] [திரு. துரைமுருகன்]

வளர்க்கத் தெரியாது; நெல்லைத் தவிர எந்தப் பயிரையும் பயிரிடத் தெரியாது. வேண்டுமென்றால், ஊடு பயிராகக் கொஞ்சம் உளுந்தை மட்டும் போட்டுவிடுவார்கள். அவர்களுக்கு நெல் பயிரிடுவதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. அங்கு எந்தவிதமான factory*-ம் கிடையாது; எந்த தொழிற்சாலையும் கிடையாது. அவர்கள் காலமெல்லாம் மண்ணோடு மண்ணாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிக்கும்படி இருந்தால், அதற்காக இந்த அரசாங்கம் போராடாமல் இருக்குமா? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'அழுத்தம் கொடுங்கள், அழுத்தம் கொடுங்கள்' என்று சொன்னார்கள். அழுத்தம் கொடுத்தால் மட்டும் வேலை முடிந்து விடும் என்று கருதுகிறீர்களா சார்? நீங்களேதான் சொன்னீர்கள், இல்லை முடியாது என்று.*

மாண்புமிகு அம்மா அவர்கள், இடைக்காலத் தீர்ப்பை Gazette*-ல் போட வேண்டுமென்று உண்ணாவிரதம் உட்கார்ந்தார்கள். அவர்கள் அதைப் போடவில்லை. அதற்காக அம்மா அவர்கள் உட்கார்ந்தார்கள்; உட்கார்ந்தார்கள்; உட்கார்ந்தார்கள். உடனே என்னவாயிற்று, டெல்லியில் திரு. நரசிம்மராவ் அவர்கள்—திரு. ரெட்டி என்று ஒருவர் இருந்தார். அந்த ரெட்டி அங்கு போனார், இங்கு வந்தார், போய்விட்டார். இங்கு திரு. சென்னா ரெட்டி வந்து அம்மாவைப் பார்த்துவிட்டு போய்விட்டார். அதன் பிறகு திரு. சுக்லா வந்தார். இங்கு வந்து அம்மாவைப் பார்த்து, 'என்ன குறை' என்று கேட்டார்கள். காவிரியினுடைய இடைக்காலத் தீர்ப்பை* Gazette*-ல் போட வேண்டுமென்று சொன்னார்கள். போட்டு விடுகிறோம் என்றார்கள். அதன் பிறகு அவர்கள் போடவில்லை. போடாமல் என்ன செய்தார்கள்,* Committee *போடுகிறோம் என்றார்கள். அந்த* Committee*-யையும் போடவில்லை. ஆக, இடைக்காலத் தீர்ப்பையும்* Gazette*-ல் போடவில்லை. இரண்டு* Committees *போடுகிறோம் என்று சொன்னார்கள். அதையும் போடவில்லை. அழுத்தம் கொடுத்துப் பார்த்தார்கள். அடுத்து என்ன செய்வது? அவ்வளவு பெரிய முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து, அழுத்தம் கொடுத்தே, அசையவில்லையே டெல்லி! அதுதான் உங்களுக்கும், எங்களுக்கும் இந்த 25 ஆண்டுக்கால அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன், நாம் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே இதில் சாதிக்க முடியுமே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) வேறு ஒன்றும் செய்ய முடியாது.*

[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 9

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர்கூட கோபித்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களுக்கு என்ன பிரச்சினை, சொல்லுங்கள்? பாரதிய ஜனதா கட்சி அங்கு வந்து கேட்கவில்லையா? இங்கிருந்து போராடுகிறார்களா? அரசியல் கண்ணோட்டம் இதில் தேவையில்லை சார். அவரவர்களுக்கு ஒரு கட்சி உண்டு, அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பார்கள், எல்லாவற்றிலுமே அரசியலைப் பார்த்துக் கொண்டிருந்தால், நாம் மனிதனாக இருக்க முடியாது. சமுதாயத்தில் இருக்க முடியாது. மனிதாபிமானத்தோடு இருக்க முடியாது. ஆகவே, நீங்கள் செய்தீர்கள், நான் அதனை ஒத்துக்கொள்கிறேன். Supreme Court order-ஐ Gazette-ல் போடுவதாகச் சொன்னார்கள் அம்மா. அதைப் போட்டார்கள். நானே சொல்கிறேன், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அதை Gazette-ல் போட்டார்கள். ஆகையால், உங்கள் ஆட்சியில் நீங்கள் இருந்தபோது செய்தீர்கள். நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது நாங்கள் செய்கிறோம். வேண்டுமென்றால், அரசியலில் குறை சொல்லிக்கொள்கிறோம். அவ்வளவுதானே தவிர, வேறு ஒன்றும் கிடையாது.

பிற்பகல் 1-50

அடுத்து, நீங்கள்கூட அப்போது இதுகுறித்தெல்லாம் பேசினீர்கள். அதையெல்லாம் இப்போது பேசிக்கொண்டிருக்க வேண்டாம். இதுகுறித்து ஒவ்வொருவரிடமும், ஐயா, நீங்கள் பேசவில்லை, ஏன் பேசவில்லை என்று நான் கேட்டுக்கொண்டிருக்கமாட்டேன்.

கடைசியாக முக்கியமான ஒன்றைச் சொன்னார்கள்; மற்றவர்களும் இங்கே சொன்னார்கள். பயிரையும், உயிரையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நாம் இப்போது வாதாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு 8 நாள் என்றால், 8 டி.எம்.சி. தண்ணீரை dead storage வைத்துவிடுவார்கள். அதோடு மேட்டூர் அணையை மூடிவிடுவார்கள். அது அவருக்கே தெரியும். இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வீட்டிற்குப் பின்புறம் ஒரு barrage இருக்கிறது. மற்ற இடங்களைவிட அங்கேயே அவ்வளவு தண்ணீர் தேங்கியிருக்கிறது. குடிதண்ணீர் கொடுத்தால் அதெல்லாம் நின்று போய்விடும். கூடிய மட்டும் குடிதண்ணீர் தருவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்போம். இன்னும் சொல்லப்போனால், என் ராசி, மழை ராசி. நிச்சயமாக, மழை வந்துவிடும். ஒன்றும் கவலைப்படாதீர்கள்.

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நவம்பர், டிசம்பர் மாதங்கள் மழைக் காலம்தானே! நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவமழை.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நான் என் ராசி என்று சொல்கிறேன். நீங்கள் மழைக் காலம் என்று சொல்கிறீர்களே! (சிரிப்பு) சரியானவர் சார், நீங்கள். (சிரிப்பு) எனவே, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அனைவருக்கும் நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்காக அவருக்கும் இந்த மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம் திருத்தியவாறு பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) அந்த வார்த்தைகளை நீங்கள் வாபஸ் வாங்கிக்கொள்கிறீர்கள்தானே, நன்றி.

4. அறிவிப்புகள்

(இ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு காலநிலை மாற்றம் குறித்த பயிற்சிப் பட்டறை 9-10-2023 அன்று மாலை நடைபெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையால், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குக் காலநிலை மாற்றம் குறித்த பயிற்சிப் பட்டறை இன்று 9-10-2023 பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுவதாக இருந்தது. ஆனால்,*